₹100/-

3 - 10

ஞானகுரு

# மகிழ்ச்சி

ஐப்பசி 2024

எஸ்.கே.முருகன்



## விஜய்யின் முதல்வர் சகாயம் ஐ.ஏ.எஸ்..?

Online
கவுன்சிலிங்
WhatsApp Call Only



Talk Therapy

கணவன், மனைவி, குழந்தைகள் உறவுச் சிக்கல்களுக்குத் தீர்வு

45 நிமிடங்களுக்கு 500 ரூபாய்

மனவள ஆலோசகர்
எஸ்.கே.முருகன்
ஜிஜி ரிலேசன்ஷிப் கவுன்சிலிங்.
முன்பதிவுக்கு :
+91 80725 89355



ஆசிரியர் பக்கம்

# உங்களுக்காக நீங்கள் வாழுங்கள்



சமீபத்தில் நண்பர் ஒருவர், "என் மகளுக்கு அமெரிக்காவில் வேலை செய்யும் மாப்பிள்ளை தேடிக்கொண்டு இருக்கிறோம்..." என்று சொன்னார்.

அவரிடம், "சென்னையில் வேலை செய்யும் நபர் தான் வேண்டும் என்று போன சந்திப்பில் சொன்னீர்களே..." என்று கேட்டதற்கு, "அப்படித் தான் தேடிக்கொண்டு இருந்தோம். சமீபத்தில் என் மகளின் தோழிக்கு அமெரிக்கா மாப்பிள்ளையுடன் திருமணமானது. அவளுடைய வாழ்க்கை அத்தனை நன்றாக இருக்கிறதாம். அதனால் மகளும் அமெரிக்க மாப்பிள்ளை கேட்கிறார்"" என்றார்.

"எனக்கு கார் வாங்குற ஆசை எல்லாம் இல்லை. பக்கத்து வீட்டுக்காரர் வாங்கிட்டார். நம்மளை விட அந்தஸ்து குறைஞ்சவரே வாங்கிட்டாரு, நாம வாங்கலைன்னா நல்லா இருக்காதுன்னு வாங்கிட்டேன்"

"கொஞ்சம் நிலம் இருக்குன்னு சொன்னாத்தான் மதிக்கிறாங்க, அதான் லோன் வாங்கி கிராமத்தில் இடம் வாங்கிப் போட்டேன்"

"கிளாஸ்ல நிறைய பசங்க கிரிக்கெட் விளையாடுறாங்களாம், அதான் பையனை கோச்சிங்ல சேர்த்துவிட்ருக்கோம்"

"எல்லோரும் கட்டுறாங்கன்னு நம்பித்தான் சீட்டுக் கம்பெனியில பணம் போட்டேன், ஓடிப் போயிட்டான். முதல்ல பணம் போட்டவங்க எல்லாம் தப்பிச்சிட்டாங்க..."

இப்படி நிறைய பேர் அடுத்தவர்களுக்காக, அடுத்தவர்களைப் போலவே வாழ்கிறார்கள். ஒருவர் எப்படி வாழவேண்டும் என்பதை அவரது அண்டை வீட்டுக்காரரே முடிவு செய்கிறார்.

உங்களுக்கு முன் காரில் ஒருவர் 120 கிலோமீட்டர் ஸ்பீடில் போகிறார் என்றால், அது அவரது விருப்பம். அவரைப் போலவே நீங்களும் 120 கிலோமீட்டர் ஓட்டுகிறீர்கள் என்றால் உங்கள் வேகத்தை தீர்மானிப்பது அவராக மாறுகிறார்.

மற்ற மனிதர்களுக்கு அடிமையாக வேண்டாம். அடுத்தவர்களைப் பார்த்து ஆசைப்பட்டு, பொறாமைப்பட்டு, விருப்பப்பட்டு உங்கள் வாழ்க்கையைத் தொலைத்துவிட வேண்டாம். உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வாழ்க்கையை நீங்களே கொண்டாட்டமாக வாழுங்கள்.

வெற்றி என்றாலும் தோல்வி என்றாலும் பொறுப்பை எடுத்துக்கொள்ளுங்கள். அதுவே, மகிழ்ச்சி.

ஆசிரியர்

# கோபத்தில் யார் அழகு..? மரணத்தில் யார் அழகு..?

தமிழகத்தின் முன்னாள் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு ஐ.ஏ.எஸ். அவர்களுக்கு அறிமுகம் தேவையில்லை. இளைய சமுதாயத்திற்கு வழி காட்டும் பணியில் இன்றும் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் அவரது, 'கேள்வியும் நானே பதிலும் நானே' புத்தகத்தில் இருந்து சிறு பகுதி மட்டும் இங்கு. படித்துப் பாருங்கள், பிடித்துப் போகும்.



**கே: கோபத்திலும் யார் அழகாக இருப்பார்கள்?**

கோபம் வருகிறபோது உலக அழகிகள் கூட பொலிவை இழந்துவிடுவார்கள். ஆனால் கோபத்திலும் அழகாக இருப்பவர்கள் குழந்தைகள்

**கே: நமக்கு நாமே எதிரியாவது எப்போது?**

உணர்ச்சிவசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டிவிடும்போது! நாம் செய்த நல்ல செயல்கள் எல்லாம் காற்றில் பறந்து போய்விடுகின்றன. அப்போது நமக்கு நாமே எதிரியாகி விடுகிறோம்.

**கே:மனிதன் எப்போது ஞானம் அடைகிறான்?**

தான் ஒன்றுமில்லை என்று உணர்கிற போது!

**கே: எத்தனை முறை கேட்டாலும் திகட்டாத பாடல் எது?**

நாட்டுப்பண்ணும்! தமிழ்த்தாய் வாழ்த்தும்!

**கே:அன்பு முக்கியமா... அறம் முக்கியமா?**

அறத்துக்கும் அன்பே ஆதாரம்!

**கே:புறம் சொல்பவர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?**

புறம் சொல்வது சிலருக்குப் பொழுதுபோக்கு. ஆற்றில் குளித்து முடித்துவிட்டு வந்த யானை ஒன்று, அழுக்கில் புரண்டு வந்த பன்றியைப் பார்த்ததும் ஓரமாக ஒதுங்கிச் சென்றது. உடனே பன்றி, 'இவ்வளவு பெரிய உருவத்தோடு இருந்தாலும்... என்னைப் பார்த்து பயந்துவிட்டாயே!' என்று பரிகசித்தது. அதற்கு யானை, 'நீ மோதினால் மறுபடி குளிக்க வேண்டுமே என யோசிக்கிறேன். உன்னை ஒரே மிதியில் என்னால் துவம்சம் செய்ய முடியும்!' என்று சொன்னது. புறம் சொல்பவர்களிடம் அந்த யானையைப் போல் நாம் நடந்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால் பன்றிகளின் சேறு நம் உடலெல்லாம் ஒட்டிக் கொள்ளும்.

**கே:நன்றாகப் பேச எதைக் கற்றுக்கொள்ள வேண்டும்?**

மௌனத்தை...

**கே:குழந்தைகள் வளர்ப்பில் உள்ள இன்றைய பிரச்சினைகள் என்ன?**

இன்றுள்ள குழந்தைகள் எந்த வரிசையிலும் காத்திருப்பதற்காகப் பழக்கப்படவில்லை. அனைத்தையுமே ஆன்லைன் மூலம் பெற்றுவிடுகிறார்கள். எனவே அவர்கள் ஏமாற்றத்துக்குப்

www.gyaanaguru.com

www.gyaanaguru.com

பழக்கப்படாமல் வாழ்கிறார்கள். ஒரு சின்ன தோல்வி ஏற்பட்டாலும் அவர்களால் தாங்கிக்கொள்ள இயலவில்லை...

**கே:சோம்பலின் உச்சம் எது?**

கையில் இருக்கும் மிட்டாயை வாயில் போட கொட்டாவி வருவதற்காகக் காத்திருப்பது.

**கே:நண்பர்களுக்கும்... சந்தர்ப்பவாதிகளுக்கும் என்ன வேறுபாடு?**

நெருக்கடி வந்தால் அதை உதவி செய்யும் சந்தர்ப்பமாகக் கருதுபவர்கள் நண்பர்கள். விட்டுவிட்டு ஓடுபவர்கள் சந்தர்ப்பவாதிகள்.

**கே:ஒருவரை புண்படுத்தாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?**

சில உண்மைகளைப் பேசாமல் இருந்தால் போதும்!

**கே:துன்பம் வரும்போது சிரிக்க முடியுமா?**

பலருக்கும் முடியும்... அடுத்தவர்களுக்கு வரும்போது!

**கே:தகுதியற்றவர்களும் புகழ் பெறக் காரணம் என்ன?**

தகுதியற்றவர்களை ஆர்வப்பட்டு தூக்கிப் பிடிப்பதாலும் தரம் பிரிக்கத் தெரியாதவர்களை அவசரப்பட்டு முன்மொழிவதாலும் இது போன்ற விபத்துக்கள் நிகழ்வதுண்டு. ஆனால் அது புகழ் அல்ல. பிரபலம் மட்டுமே! வளரும்போது வாத்துக்களுக்கும் அன்னத்துக்குமான வேறுபாடு வெளியில் தெரிந்துவிடும். கண்கள் சொல்லாததைக் காலம் சொல்லிவிடும்.

**கே:திருமணம் வெற்றியடைய என்ன செய்ய வேண்டும்?**

கணவனும் மனைவியும் நண்பர்களைப் போல பழக வேண்டும். ஒரே ரசனையை உள்ளவர்களைவிட... அடுத்தவர் ரசனையை மதிக்கத் தெரிந்தவர்களே மிக நல்ல இணையர்கள்.

**கே: எது அழகு?**

செயற்கை ஒப்பனைகளின்றி இயல்பாக இருப்பதே அழகு!

**கே:பிரபலமானவர்களைப் பற்றி ஏன் வதந்திகள் அதிகமாக உருவாகின்றன?**

பிரபலமானவர்கள் மீது மக்களின் இதயத்தில் ஒரு சின்ன பொறாமை இருக்கிறது. அவர்களைப் போல நாமும் பலருக்குத் தெரியவில்லையே என்கிற வருத்தம் மேலிடுகிறது. அவர்களுக்கு அவதூறு நேர்ந்தால்... தாங்கள் அவர்களைவிடப் புனிதமானவர்கள் என்பதைப் போன்ற எண்ணமும் சமாதானமும் ஏற்படுகிறது. அந்தப் பரபரப்பை வைத்தே வதந்திகளைப் பரப்புகிறவர்கள் இயங்குகிறார்கள்.

**கே:எந்தப் பஞ்சம் கொடியது?**

இயற்கை தவறுவதால் ஏற்படும் பஞ்சத்தை விட... இருப்பவர்கள் பதுக்குவதால் உண்டாகும் பஞ்சம் கொடியது.

**கே:யாருடைய மரணம் அழகு?**

இறந்த பிறகும் வாழ்பவர்களின் மரணம்!

**கே:எப்போது தவறுகள் மறைகின்றன?**

அவற்றை மனதார ஒத்துக்கொள்ளும் போது!

**கே:எது சிறந்த உதவி?**

செய்த உதவியை மற்றவர்களுக்குச் சொல்லாமல் இருப்பது!

எல்லாவற்றையும் மக்கச் செய்து அழித்துவிடும் மண்ணால், விதையை மட்டும் அழிக்க முடிவதில்லை.

மந்திரச் சொல்







# கவித்துவம்

பிறந்த குழந்தைக்குத் தெரியாது
தான் பிறந்திருப்பது
இறந்த மனிதனுக்குத் தெரியாது
தான் இறந்திருப்பது
அப்படித்தான்
எனக்கும் தெரியாது
உன்னைப் பிரிந்திருப்பது.

– ஃபிரான்சிஸ் கிருபா





# கணவனுக்குத் தாயாக, மனைவிக்குத் தந்தையாக மாறுங்கள்.

கவலை தோய்ந்த முகத்துடன் ஒரு தம்பதியர் ஞானகுரு முன்னே வந்து நின்றனர். ”ஜோதிடரிடம் கேட்டு அனைத்துப் பொருத்தங்களும் இருப்பது தெரிந்தே என் மகளுக்குத் திருமணம் முடித்துவைத்தோம். ஆனால், இருவருக்கும் தினமும் ஏதேனும் ஒரு காரணத்தால் சண்டை வந்துகொண்டே இருக்கிறது. பிரிந்துவிடுவார்களோ என்ற பயம் வருகிறது” என்றனர். அவர்களுக்குப் பின்னே ஒளிந்திருந்த, மகளை முன்னே வரவழைத்துப் பேசினார் ஞானகுரு.

“திருமணம் முடிக்கும் பெண்ணுக்கு தாயைப் போன்ற பொறுமை முக்கியம். இன்னும் தெளிவாகக் கூறுவதென்றால் கணவனுக்குத் தாயாக இருந்தால் மட்டுமே அந்த உறவு நிலைக்கும்” என்றார் ஞானகுரு.

“நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பது புரியவில்லை..?”

’’தன்னுடைய பிள்ளை எத்தனை முறை தவறு செய்தாலும் தாய் பொறுத்துக்கொள்கிறாள். மீண்டும் மீண்டும் மன்னிக்கிறாள். குழந்தை தவறு செய்தால் ஏற்பது போன்று கணவனையும் மன்னித்து ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை வேண்டும். ஏனென்றால், ஒவ்வொரு கணவனும் மனைவியிடம் தன்னுடைய அம்மாவைத்தான் தேடுகிறான். அதாவது, அவனுடைய தவறுகளை அம்மா ஏற்றுக்கொண்டது போலவே மனைவியும் ஏற்க வேண்டும், உற்சாகப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறான்.

ஆனால், இன்றைய பெண்கள் தனித்தன்மை மிக்கவர்கள். வளர்ந்த ஆணுக்குத் தாயாக இருப்பதற்கு எந்தப் பெண்ணும் விரும்புவதில்லை என்பது மட்டுமின்றி, அதற்காக முயற்சியும் எடுப்பதில்லை. இந்த விஷயத்தில், தன்னுடைய தாயைப் போன்று மனைவி இல்லை என்ற அதிர்ச்சியை பெரும்பாலான ஆண்களால் தாங்கிக்கொள்ள இயலுவதில்லை. ஆகவே, திருமணத்தில் ஏமாந்துவிட்டதாக நினைக்கிறான். அதேபோல், பெண்ணுக்கும் நிறைய விருப்பங்கள் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்வது என்றால் குறைந்தபட்சம் தன்னுடைய தன்னுடைய தந்தையைப் போன்றாவது கணவன் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறாள். ஆனால், எந்த ஓர் ஆணும் தன்னுடைய குணத்தை திருமணத்திற்குப் பிறகும் மாற்றிக்கொள்வது இல்லை. அதனாலே, பெண்ணும் கடுமையான ஏமாற்றத்துக்கு ஆளாகிறாள்.

ஆக, திருமணம் என்பது ஏமாந்துபோன இருவரின் சங்கமமாக இருக்கிறது. ஆகவே, இருவரும் ஒரே கூண்டில் அடைக்கப்பட்ட சண்டைக்கோழியாக மாறிவிடுகிறார்கள். இருவருமே தங்கள் சந்தோஷமும் எதிர்காலமும் பறிபோனதாக நினைத்து, ஒருவரையொருவர் குற்றம் சாட்டவும், சண்டை போடவும் செய்கிறார்கள். இனிமேல், சேர்ந்து வாழ்வதற்கு வாய்ப்பே இல்லை, பிரிவதுதான் ஒரே தீர்வு என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். இவர்களுக்குள் எரியும் நெருப்பில், பெற்றவர்கள்

எண்ணெய் ஊற்றினால், அடுத்து விவாகரத்துதான், வாழ்க்கையில் மிகப்பெரிய தீர்வு என நினைக்கிறார்கள்.

பெரும்பாலான திருமண பந்தத்தில் மிகப்பெரும் குற்றவாளியாக ஆணே இருக்கிறான். ஒவ்வொரு பெண்ணும் காதலியாக, மனைவியாக வாழ்த்தான் விரும்புவாளே தவிர, ஒருவன் செய்யும் தவறுகளை பொறுத்துக் கொள்ளும் தாயாக மாற விரும்புவதில்லை.

பெண்ணை தன்னுடைய காதலியாகவும், மனைவியாகவும் ஒருவன் ஏற்றுக்கொண்டால், அதன்பிறகு அவளே தாயாகவும் மாறுவாள். அதுவரை ஆண் காத்திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால், ஒவ்வொரு பெண்ணும் அடிப்படையில் ஒரு தாய். மேலும், குடும்ப வாழ்வில் பெண்ணைவிட ஆணுக்குத்தான் கூடுதல் அனுகூலம் இருக்கிறது. அதன்படி, திருமணம் செய்துகொண்ட ஆண்களும், திருமணம் செய்துகொள்ளாத பெண்களும்தான் அதிக சந்தோஷமாக இருப்பதாக உணர்கிறார்கள்.

இன்னொரு உண்மையை ஆணும், பெண்ணும் புரிந்துகொள்ள வேண்டும். ஆணும், பெண்ணும் தனித்தனியே வாழ்ந்துவிட முடியும்



என்றாலும், இயற்கை மனிதர்களை அப்படி படைக்கவில்லை. ஒருவருக்கொருவர் நிரப்பிக்கொள்ளும் வகையில் ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழ்வதுதான் சிறப்பான வாழ்க்கையாக கருதப்படுகிறது. எனவே, இன்று இருவரும் பிரிந்தாலும், வேறு ஒருவருடன் பின்னர் இணையத்தான் வேண்டும். எனவே, உடைந்து போயிருக்கும் உறவை முடிந்த வரையிலும் சீர்படுத்தும் வேலையில் இருவரும் இறங்கவேண்டும்.

பெண்களை விட ஆண்கள்தான் தாம்பத்திய வாழ்க்கையில் அதிக சுகமும், சந்தோஷமும் அடைகிறார்கள். மனைவி இறந்துவிட்டால், ஆண்கள் மீண்டும் திருமணம் செய்துகொண்டால் மட்டுமே அவர்களால் வாழ்க்கையை நடத்த முடிகிறது. ஆனால், கணவனை இழந்த பெண்களால் எளிதில் தனித்து வாழ்ந்துவிட முடிகிறது. எத்தகைய துன்பத்தையும் ஏற்றுக்கொண்டு வாழ்க்கையை நடத்திவிடுகிறாள். எனவே, ஆணுக்குத்தான் பெண் அதிகம் தேவைப்படுகிறாள் என்பதால், ஆரம்ப காலங்களில் அவனே அதிகம் விட்டுக்கொடுக்க வேண்டும்.

திருமண வாழ்க்கை சிறப்பாகத் தொடங்கவேண்டும் என்றால், முதலில் கட்டாயக் கல்யாணத்தை நிறுத்த வேண்டும். திருமணம் வேண்டாம், இந்த பெண் வேண்டாம், இந்த மாப்பிள்ளை வேண்டாம் என்று சொல்பவர்களை கட்டாயப்படுத்தி திருமணம் முடித்துவைத்தால், அவர்கள் அத்தனை எளிதில் தங்கள் மனதை மாற்றிக்கொள்ள மாட்டார்கள். சண்டை போடுவதற்கு சாக்கு பார்த்துக்கொண்டே இருப்பார்கள். எனவே, இதனை ஆரம்பத்திலேயே தவிர்த்துவிடுவது நல்லது. திருமணம் என்பது நிறைகுறைகளுடன் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளும் வாழ்வு. குறை இல்லாதவர் யாரும் இல்லை என்பதும், யாரும் யாருக்காகவும் மாறத் தேவையில்லை என்ற உண்மையும் புரிந்துவிட்டால் அந்த திருமண வாழ்வு இறப்பாக அமைந்துவிடும்.

அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய முக்கியமான விஷயம் என்ன தெரியுமா..? உலகெங்கும் விவாகரத்து நிறைய நடக்கிறது என்றாலும், அதைவிட அதிகமாக திருமணம் நடக்கிறது என்பதையே.

ஏனென்றால், மனித வாழ்க்கையில் இதைவிட சிறந்த உறவு வேறு எதுவும் கண்டறியப்படவில்லை. இந்த உறவுக்குத்தான் பலரும் காத்துக்கிடக்கிறார்கள். எனவே, கையில் இருக்கும் உறவின் மகிமையை அறியாமல் உடைத்துவிட வேண்டாம்.

முட்கள் நிரம்பியிருந்தாலும், திருமண உறவு என்பது ஒரு ரோஜாவைப் பறிப்பது போன்றதுதான். பழகிவிட்டால் முட்களைத் தொடாமல் ரோஜாவை மட்டும் பறித்து மகிழ முடியும். அதுவரை பொறுமையாக காத்திருக்கவும், விட்டுக்கொடுக்கவும் கற்றுக்கொள்" என்றார் ஞானகுரு.

பெண்ணின் முகத்தில் தெளிச்சி தென்பட்டது.







# கவித்துவம்




நடைபாதையில்
இளவயது கொண்ட யாரேனும்
நடந்து போவதைக் கண்டால்
சற்றே வேகமெடுத்து
அவர்களை விட
இளமையும் வேகமும்
எனக்கிருப்பதை காட்டிவிட்ட
பெருமைக்குள் நுழைகிறேன்.
நடப்பது முதியவர் எனில்
என் நடையின்
வேகத்தைக் குறைத்து கொண்டு
தளர்வாய் நடந்து
அவர்தம் இளமையை மீட்டெடுக்கிறேன்
விட்டுக் கொடுப்பதற்கும்
எட்டிப் பிடிப்பதற்கும்
இடையே ஊடாடுகிறது
வாழ்வின் மகிழ்ச்சி.

- மதுரை சத்யா

# வெற்றிக்கு ஐந்து வில்லன்கள்

**புத்தக அறிமுகம்**




ஒரு ஹோட்டலுக்குப் போகிறீர்கள். நீங்கள் ஆர்டர் கொடுத்த உணவு வருகிறது. அதை மகிழ்ச்சியுடன் சாப்பிடும் தருணத்தில், உணவுக்குள் ஒரு ஈ செத்துக்கிடப்பது தெரியவருகிறது.

கத்திக் கூப்பாடு போட்டு உங்கள் கோபத்தைக் காட்டுவீர்களா..? உணவை அப்படியே வைத்துவிட்டு எழுந்துவிடுவீர்களா..? பக்கத்தில் சாப்பிடும் நபர்களுக்குத் தெரியாமல் சர்வரிடம் அதை சுட்டிக்காட்டி வேறு உணவு கொண்டுவரச் சொல்வீர்களா..? மேனஜரை வரவழைத்து சுட்டிக் காட்டுவீர்களா..? இதெல்லாம் சகஜம் என்று ஈயை தூக்கிப் போட்டுவிட்டு தொடர்ந்து சாப்பிடுவீர்களா..?

இது போன்ற தருணங்களில் ஒவ்வொரு நபரும் எப்படி நடந்துகொள்வார்கள் என்பதைச் சொல்வதே ஒருவரது குணாதிசயம். அப்படி ஒருவர் நடந்துகொள்ளும் அணுகுமுறையை ஆங்கிலத்தில் ஆட்டிட்யூட் என்று சொல்வார்கள்.

வெற்றி, தோல்விக்கு மட்டுமல்ல மகிழ்ச்சி, துன்பத்துக்கும் அவரது அணுகுமுறை எனப்படும் ஆட்டிட்யூட் காரணமாக இருக்கிறது. ஆட்டிட்யூட் என்பதை ஒருவரது இயல்பு, குணநலன், நடவடிக்கை, குணாதிசயம், மனப்பான்மை, மனோபாவம் என்றெல் லாம் சொல்லலாம். நேர்மறையாக, எதிர்மறையாக, கோபமாக, அமைதியாக, ஆளுமையுடன் என ஒவ்வொரு நபரும் அவர் வகுத்து வைத்திருக்கும் விதிகளின் அடிப் படையில் ஒவ்வொரு விஷயத்தையும் அணுகுகிறார்கள்.

அதிக திறமை இல்லாத மனிதராக இருந்தாலும் நல்ல அணுகுமுறை கொண்டவர் என்றால், நல்ல மனிதர் என்று பெயர் வாங்கிவிடுகிறார். அதேநேரம் அதிக திறமை உள்ளவர் என்றாலும் மோசமான அணுகுமுறை உள்ளவர் என்றால், 'திறமை இருந்து என்ன செய்றது, நல்ல மனுஷன் இல்லையே' என்று விலகுவார்கள்.

எனவே, ஒவ்வொரு நபரின் வெற்றிக்கும் மகிழ்ச்சியும் இந்த ஆட்டிட்யூட் முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். இந்த ஆட்டிட்யூட்டை எப்படி சாதகமாக பயன்படுத்திக் கொள்வது என்பதை, தி டிஃப்ரன்ஸ் மேக்கர் (The Difference Maker) என்ற புத்தகத்தில் சிறப்பாக வடித்திருக்கிறார் ஆசிரியர் ஜான் சி மேக்ஸ்வெல்.

வெற்றி தரும் ஆட்டிட்யூட் வளர்த்துக்கொள்வது அத்தனை சிரமமில்லை. ஆனால், அப்படி முன்னேறிவிட முடியாமல் தடுக்கக்கூடிய ஐந்து வில்லன்கள் இருக்கிறார்கள் என்று மாக்ஸ்வெல் எச்சரிக்கிறார். இந்த ஐந்தையும் புரிந்துகொண்டு முறியடிக்கப் பழகிவிட்டால் வெற்றி நிச்சயம் என்கிறார். எவை எல்லாம் வெற்றிக்கு எதிரான ஆட்டிட்யூட் என்று பார்க்கலாம்.

## ஊக்கமின்மை

என்ன செய்வது என்றாலும் ஆர்வத்துடன் செய்யுங்கள். ஆர்வமும் ஊக்கமும் இல்லாமல் செய்யப்படும் விஷயங்களே வெற்றியைத் தடுக்கும் முக்கியமான வில்லன். ஊக்கத்துடன் செயல்பட வேண்டும் என்றால் உங்களை உற்சாகப்படுத்தும் நபர்களுடன் பழகுங்கள். நீங்கள் செய்கிற எதுவும் உருப்படாது என்று சொல்கிறவர்களோடு பழகினால் எப்போதும் அவநம்பிக்கையே தோன்றும். நெகட்டிவ் வார்த்தைகள் பேசுவதைத் தவிர்த்துவிடுங்கள், உங்களுக்கே தெரியாமல் அவை ஏற்படுத்தும் அதிர்வுகள் ரொம்பவே சோர்வாக்கும், முன்னேற்றத்தைப் பாதிக்கும்.

## மாற்றம்

யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள், நான் இப்படித் தான் இருப்பேன் என்று மாற்றங் களை ஏற்காமல் முரண்டு பிடிக்காதீர்கள். மாற்றம் இல்லாமல் முன்னேற்றம் இல்லை. இதை மனத்தில் வையுங்கள். புதிய விஷயங்களுடன் இணைந்து செல்வதே வெற்றிக்கு எளிதான வழி. எனவே, ஒவ்வொரு மாற்றம் நிகழும்போதும் ஏற்றுக்கொள்ளும் முதல் நபராக இருங்கள்.

## பிரச்னைகள்

பிரச்னை இல்லாத மனிதர் என்று யாருமே இல்லை. எனவே, பிரச்னைகளைக் கண்டு அஞ்சாதீர்கள். பிரச்னை வரலாம் என்று எதிர்பார்த்து தயாராக இருங்கள், அவற்றை எப்படி எதிர்கொள்ளலாம் என்று முன்கூட்டியே யோசித்துக் கொள்ளுங்கள், சாவி இல்லாமல் பூட்டு தயாரிக்கப்படுவதில்லை. எனவே, ஒன்றுக்கு மூன்று தீர்வுகளைச் சிந்தித்துவையுங்கள். பல சமயங்களில், பிரச்னை என்று நினைப்பது சாதாரணமாகத் தென்படும். அசட்டையாக விட்டால் பெரிய ஆபத்தாக மாறிவிடும். எனவே பிரச்னைகளைக் கண்டு விலகி ஓடாமல், அந்த தீர்வு தான் வெற்றிக்கு வழி என்பதை அறிந்து தைரியமாக எதிர்கொள்ளும் குணத்தை வளர்த்துக்கொள்ளுங்கள்.

## பயம்

ஒவ்வொரு நபருக்கும் பயம் இருக்கவே செய்யும். எனவே, பயத்தை மறைக்க வேண்டிய அவசியமே இல்லை. எது அச்சம் தருகிறதோ, அதை ஒப்புக் கொள்வதே வீரம். அவரால் தான் அந்த பயத்தை வெற்றிகொள்ள முடியும். பயத்தின் தொடக்கப் புள்ளி எது என்று தேடிப் பாருங்கள். ஆழமாகத் தேடினால் அந்த பயத்திற்கான காரணம் அற்பமாக இருக்கும். எனவே, பயம் என்ன வென்று அறிந்து அதை தெளிவுடன் ஆய்வு செய்து வெளியேறும் தைரியத்தை வளர்த்துக்கொள்ளுங்கள்.

## தோல்வி

நாணயத்திற்கு இரண்டு பக்கம் இருப்பது போன்று வாழ்க்கையில் வெற்றியைப் போலவே தோல்வியும் முக்கியம், சகஜம் என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். எல்லா நேரமும் வெற்றி அடைய வேண்டும் என்பது அவசியம் அல்ல, சில நேரங்களில் தோற்பதும் நல்ல அனுபவமாக இருக்கும். நல்ல பாடமாக இருக்கும். எனவே, தோல்வியைக் கண்டு அச்சப்படாதீர்கள். ஒரு பெரிய வெற்றிக்கு நீங்கள் கொடுத்திருக்கும் விலை என்று எடுத்துக்கொள்ளுங்கள்.

இந்த ஐந்து குணாதிச்சயங்களையும் வளர்த்துக்கொள் பவர்களுக்கு வெற்றி நிச்சயம் என்கிறார் மேக்ஸ்வெல்.

அதோடு எல்லா விஷயங்களையும் நம்மால் கட்டுப்படுத்த முடியாது என்ற உண்மையைப் புரிந்துகொள்ளுங்கள். நம் கையில் இல்லாத விஷயங்களுக்கும் நம்மால் எதுவும் செய்ய முடியாத நிலையிலும் என்ன நடந்தாலும் ஏற்றுக்கொள்வதே முக்கியம்.

வெற்றி நிச்சயம்.

**சக்திவேல் பாலசுப்பிரமணியன்**

www.gyaanaguru.com
www.gyaanaguru.com



ஞானகுரு தரிசனம்

# புத்தனும் முட்டாள்

திருடர்களால் கற்பழித்துக் கொல்லப்பட்க கர்ப்பிணிப் பெண் இரவு நேரங்களில் அழும் சத்தம் கேட்கிறது என்பதற்காக, அவளுக்குக் கோயில் கட்ட ஆலோசனை கேட்ட வர்களிடம், ‘‘தன்னை காப்பாத்திக்க முடியாம தற்கொலை செஞ்சுக்கிட்டவ, கோயில்ல உட்கார்ந்து உங்களையும் ஊரையும் காப்பாத்தப் போறாளா?” என்று கேட்ட ஞானகுருவிடம் கோபமாகப் பேசினார்கள்.

“சாமி.. செத்துப் போன கர்ப்பிணியை மதிப்புக் குறைவாப் பேசாதீங்க. அவ ரொம்பவும் துடியானவ, எல்லை தாண்டி வந்து ரத்தம் குடிச்சிருவா...” என்று அதிர்ச்சியுடன் சொன்னார்கள்.

“அப்படின்னா, அவளோட மரணத்துக்குக் காரண மானதிருடனுங்களைதேடிப்பிடிச்சுகொன்னுட்டாளா?”

இருவரும் எதுவும் பேசமுடியாமல் அமைதியாக இருந்தனர்.

“ஒவ்வொரு ஊரிலும் இப்படி துர்ப்பாக்கியமாக சிலர் உயிர்விட நேர்கிறது. இப்படி இறந்தவர்களை சிறு தெய்வங்களாகக் கும்பிடும் மக்கள், பயப்படுவது ஏன் தெரியுமா? ஏதோ ஒரு வகையில் அந்த பெண்ணின் மரணத்திற்கு இந்த ஊரும், மக்களும் காரணமாகிவிட்ட குற்ற உணர்ச்சிதான். இத்தனை காலத்துக்குப் பின்னரும் உங்களுக்கு அதுபோன்ற குற்ற உணர்ச்சிகள் தேவையில்லை என்பதால் அந்த குப்பைகளைத் தூக்கி எறியுங்கள்” என்றேன்.

“அப்படின்னா... அந்த இடத்துல காளியம்மனுக்கு ஒரு கோவில் கட்டிரலாமா?”

‘‘குழந்தையால் அம்மாவின் முந்தானையை பிடித்துக் கொள்ளாமல் தூங்க முடியாது என்பது

போன்று எதையாவது பிடித்துக் கொள்ள ஏன் அலைகிறீர்கள்? அந்த புளிய மரத்திற்கு மஞ்சள் ஆடை அணிவித்து, சந்தனம், குங்குமம் வைத்து அலங்காரம் செய்திருப்பீர்களே...”

“ஆமா சாமி..”

“முதல் வேலையாக அந்த மரத்தை வெட்டி எறிந்துவிட்டு, இறந்துபோன பெண்ணின் நினைவாக அங்கே ஒரு இலவச மருத்துவமனை கட்டுங்கள்” என்றேன்.

“நீங்க சொல்றமாதிரி எல்லாம் எங்க கிராமத்துல போய் பேசமுடியாது சாமி, எங்களை பைத்தியம், முட்டாள் என்பார்கள்”

“ஒரு ராஜ்யத்தையே துறந்து புத்தர் ஓடியபோது அவரை முட்டாள் என்றுதான் சொன்னார்கள். மன்னிப்பு கேட்க மறுத்த சாக்ரடீசையும் முட்டாள் என்றார்கள். பிறர் சொல்கிறார்கள் என்பதால் நீங்கள் முட்டாளாக மாறிவிடப் போவதில்லை”

“எங்க ஊருப்பக்கம் ஒரு தடவை வந்து பாருங்க, அப்பத்தான் அவங்க சூன்யம், வசியம், செய்வினைன்னு எப்படியெல்லாம், எதுக்கெல்லாம் பயப்படுறாங்கன்னு தெரியும். எங்களோட நீங்களும் வந்து மக்களுக்கு புரிய வையுங்களேன்...”

“எனக்குக் கால்களில் வேர்கள் கிடையாது என்பதால், எங்காவது சுற்றிக் கொண்டுதான் இருப்பேன், மலையில் கொஞ்சகாலம் இருந்துவிட்டு திரும்பும் போது உங்கள் ஊருக்கு வருகிறேன்'' என்றதும் இருவரும் திருப்தியடைந்தார்கள்.

அனைவரும் எழுந்து நடக்கத் தொடங்கினோம். கொஞ்சநேரத்திலேயே செண்பகா அருவியின் சப்தம் நெஞ்சை ஜில்லென்று குளிரவைத்தது. அருவிக்கு வாசல் போன்று இருந்த செண்பகாதேவி கோயிலை நெருங்கி கொஞ்சநேரம் உற்றுப் பார்த்தேன். எந்த ஒரு சிறு மாற்றமும் தென்படவில்லை. வெளியே வந்தபோது, ஆலயத்தின் பின்புறம் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்த கல்லூரி மாணவர்கள் என்னையும் அழைத்தார்கள். அவர்களை புன்னகையால் மறுதலித்துவிட்டு செண்பகா தேவி அருவியைப் பார்த்தேன். என்னை வரச்சொல்லி அழைத்தது. அருவிக்குள் நுழைந்து ஆசைதீர ஆனந்தக் குளியல் போட்டேன். அந்தக் குளியல் மட்டும் போதாது என்று தோன்றவே, குளம் போன்று கட்டியிருந்த நீரில் குதித்து அப்படியே அமர்ந்தேன். குளிக்காமல் பாறையின் மீது அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சங்கரனிடம், “ஏன் குளிக்கவில்லை?” என்று கேட்டேன். “உங்களை மாதிரி சந்தோஷமா அனுபவிச்சுக் குளிக்க இதுல என்ன இருக்குன்னு தெரியலை. எப்பவும் குளிக்கிறது தானேன்னு சலிப்பா இருக்கு” என்றார்.

“அதானே சாப்பிடவும், தூங்கவும் மட்டும்தான் எவருக்கும் சலிப்பதே யில்லை'' என்றதும் என்னுடன் சேர்ந்து சங்கரனும் சிரித்தார். அதற்குள் கிராமத்து இளைஞர்களும் குளித்து வந்தார்கள்.

''குளியல் போட்டது நல்ல உற்சாக மாக இருக்கிறது, இந்த துடிப்பிலேயே தேனருவி நோக்கி நகர்ந்து விடுகிறேன்'' என்றேன்.



## புத்தனும் முட்டாள்





வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டுமெனில், அடுத்தவர்களின் வாழ்க்கையை எட்டிப் பார்க்காதீர்கள்.

## மந்திரச் சொல்

“இந்த வயதில் தேனருவி தரிசனம் அவசியம்தானா? உங்கள் உடல் தாக்குப் பிடிக்குமா? என்னுடன் கீழே வாருங்களேன் ஏதாவது உருப்படியாக செய்யலாம்” என்றார் சங்கரன்.

“ஓ... உங்களுக்கு வீடு வாங்கித் தர்றதைப் பத்திச் சொல்றீங்களா?” என்று நான் சிரிக்க, “அடப்போங்க சாமி... மலைக்கு மேல நல்ல பாதை இல்லே, நிறைய தண்ணீர் ஓடுது, மழை வேற பெஞ்சுக்கிட்டே இருக்கு. அதான் கஷ்டமா இருக்கும்னு சொல்றேன்” என்றார் சங்கரன்.

“முயற்சி, ஆசை, அன்பு, புரிதலுடன் ஒரு காரியத்தைச் செய்யும்போது, உடல் எத்தனை சிரமம் அனுபவித்தாலும், அது துன்பமாகத் தெரியாது. எதிர்பார்ப்பதை விட வேகமாக அந்த காரியத்தை முடித்துவிட முடியும். ஆனால் துணிச்சல் அற்றவராக உங்களை நினைத்துக் கொண்டால், நீங்களே நினைத்தாலும் வெற்றிபெற முடியாது”

“நீங்க சொல்றது சரிதான் சாமி... ஆனா, ஏதாவது புதுசா செய்ய நினைச்சாலே பயமா இருக்கே”

“பயம் என்பது ஒரு சக்தி. அதனை பலவீனத்திற்கு மட்டும் பயன்படுத்தாமல் பலமாகவும் உபயோகப்படுத்தலாம். பயம் உடலுக்கு கூடுதலான ஆற்றலையும், கூர்மையும் கொடுக்கும் என்பதுதான் உண்மை. காட்டு விலங்குகளைக் கண்டு பயந்துபோய் நடுங்குவது பலவீனம். தப்பியோடுதலும், எதிர்த்துப் போராடுவதும் பயத்தில் இருந்து தோன்றும் பலம். அதனால் பயத்தை எதிரியாக கருதாமல் நண்பனாக நினைப்பதே நல்லது. இன்னும் சொல்லப்போனால் அவசரமாக முடிவெடுக்க வேண்டிய நேரங்களில் புத்திசாலித்தனத்தை நம்பாமல், உடல் சொல்வதைக் கேட்டாலே போதும். ஏனென்றால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய தேவை உடம்புக்கு இருக்கிறது.”

“சரி சாமி... ஆனா நம்பிக்கையோடு பயமில்லாமல் செயல்படத் தொடங்கிய எத்தனையோ பேர் தோத்துப் போயிருக்காங்களே...”

‘‘தோல்விக்கு மிக முக்கியமான காரணம் விடாமுயற்சி இல்லாததுதான். இன்னும் சில நொடிகளில் அல்லது சிறு இடைவெளியில் வெற்றி காத்துக் கொண்டிருப்ப துண்டு. ஆனால், அது புரியாமல் முயற்சியைக் கைவிட்டு தோற்றவர்கள்தான் ஏராளம். ஒரு முறை சூடுபட்டதும், தனக்கு இது சரிப்படாது என்று பின்வாங்குபவன் எந்த காரியத்திலும் வெற்றிபெறப் போவதில்லை. கிடைத்த அனுபவத்தை மூலதனமாக்கிக் கொண்டவன், கீழே விழுந்ததை ஒரு பொருட்டாக கருதாதவன் மட்டுமே இந்த உலகில் வெற்றிபெறத் தகுதியானவர்கள்...” என்று சொன்னபடி தேனருவிக்குச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் நடக்கத் தொடங்கி னேன். கொஞ்சதூரம் சென்று திரும்பிப் பார்க்க, எனக்குப் பின்னே சங்கரனும், கிராமத்து இளைஞர்கள் இருவரும் வந்து கொண்டிருந்தார்கள். நான் திரும்பியதைப் பார்த்ததும் வேகமாக அருகே வந்த சங்கரன், “நான் கடைசி வரைக்கும் மேல வரப்போறதில்லை, இன்னும் கொஞ்சதூரம் வர்றேன்” என்றார். அந்த இளைஞர்களில் ஒருவன் வேகமாக முன்வந்து, “சாமி... எனக்கு ஒரு கேள்வி இருக்கு...” என்று முன்வந்தான். சிரித்தபடி அனுமதி கொடுத்தேன்.

“என் பேரு ரவிக்குமார், கல்யாணம் முடிச்சு இரண்டு வருஷமாகுது. வீட்ல பார்த்து வைச்சு கல்யாணம் நல்லாத்தான் நடந்திச்சு. ஆனா என்னவோ அவளுக்கும் எனக்கும் ஆரம்பத்துல இருந்தே ஒத்து வரலை. அதனால மனசை மாத்துறதுக்காக நான் சாமி, கோயில், குளம்னு சுத்தத் தொடங்கிட்டேன். அவளை தள்ளிவச்சிட்டு இன்னொருத்தியை கட்டிக்கலாம்னு பார்க்கிறேன் சாமி. என் ஜாதகத்திலேயும் இரண்டுதார யோகம் இருக்கு” என்றான்.

“இரண்டு தாரம் என்பதை யோகம் என நினைக்கிறாயா?” என்ற என் கேள்விக்கு பதில் சொல்லாமல் நின்றான்.

“மீண்டும் ஒரு திருமணம் முடித்ததும் எல்லா சிக்கல்களும் தீர்ந்துவிடப் போகிறது என்று எண்ணாதே. முதல்மனைவி புகைப்படம் இருந்த இடத்தில் இன்னொருத்தியின் படத்தை மாட்டி அழகு பார்க்கப் போகிறாய். புதிய மனைவியாக ஒருத்தி வந்தால் அவளை நீ எப்படி நடத்துவாயோ, அதையே இப்போது இருப்பவளிடம் செயல்படுத் தலாமே. உன் மனைவியிடம் பேசுவதற்குப் பயந்து கோயில், குளம் என்று சுற்றிக் கொண்டிருப்பதால் சிக்கல்கள் தீர்ந்துவிடப் போவதில்லை. அவளுக்கு எது தேவையென முதலில் தெரிந்து கொண்டு அதைக் கொடுக்கப் பார். அவளையே இரண்டாவது மனைவியாக நினைத்துக் கொள். இதுவரை நடந்தவற்றை மறந்து, அவளை

ஞானகுரு
# மகிழ்ச்சி
டிஜிட்டல் மாத இதழ்
3 - 10

நிறுவனர்
**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்
**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்
**எம்.நிலா**

வடிவமைப்பு
**வி.கிராபிக்ஸ்**
**கே.எம்.பிரசன்னா**

நிர்வாக இயக்குனர்
**அரசு கிருத்திகா**

முதன்மை செயல் அலுவலர்
**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்
**ரத்தினபாண்டியன்**

**ஞானகுரு பப்ளிகேஷன் மூலம் மகிழ்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது. அலுவலக முகவரி :**

ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.
**தொடர்புக்கு:** +91 98409 03586,
72997 53999, 98844 53014
**இ.மெயில் :** skmnila1@gmail.com
**இணையதளம் :** www.gyaanaguru.com

ஒரு புதுப்பெண்ணாக நினைத்து உன் வாழ்க்கையைத் தொடங்கு” என்றேன்.

“அவ இதுவரை என்னைப் பற்றிப் பேசியதையெல்லாம் எப்படி மறக்க முடியும்?” என்று ஆதங்கமாகக் கேட்டான்.

“அவள் இதுவரை பேசியதை மட்டுமில்ல, அவளையே மறந்துவிடு என்கிறேன். அப்போதுதான் அவளை உன்னால் புதிய மனைவியாகப் பார்க்க முடியும். அது முடியாது என்று அடம்பிடித்தால், இன்னொரு மனைவியை கட்டிக் கொண்டு, இதே மாதிரி மீண்டும் பிரச்னைகளுடன் கோயில் கோயிலாக அலைந்து கொண்டிரு...” என்று பேசிக்கொண்டு இருந்தபோது திடீரென மேகங்கள் சேர்ந்து மழை பொழியத் தொடங்கியது. குளித்து முடித்த ஆடை காய்வதற்குள், மீண்டும் மழையில் நனைவது சந்தோஷம் தரவே, நடையை வேகமாக எட்டிப் போட்டேன். பாதையை மறைக்கும்படி பகலிலேயே இருட்டிக் கொண்டு வருவதைப் பார்த்த இளைஞர்கள் பயந்துபோய் தயங்கி நிற்கவே... புன்னகையுடன் அவர்களை வழியனுப்பி வைத்தேன்.

“சங்கரா உனக்குப் பயமாக இல்லையா?”

“வயசுல அடிக்கடி வந்துட்டுப் போன இடம்தான். அவங்களுக்கு குற்றாலம் புதுசுங்கிறதால திடீர்னு இருட்டுனதும் பயந்துட்டாங்க. ஆமா, மேல தங்கப் போறேன்னு சொல்றீங்களே சாப்பிட என்ன செய்வீங்க?”

‘‘நொண்டிச் சாமியார் சாப்பாட்டுக்கு என்ன செய்றாரு?”

“வேண்டாம், நான் என்னத்தையாவது சொல்வேன், உடனே கோள் சொல்லாதேன்னு பிரசங்கம் செய்வீங்க” என்று சிரித்தார்.

“பரவாயில்லை சொல்லு”

“முயலைப் பிடிச்சு அப்படியே கடிச்சுத் திங்கிறாருன்னு சொல்றாங்க” “அவரே நொண்டியாக இருக்கும்போது ஓடும் முயலை பிடிக்க முடியுமா?”


“முயலோட குழியைப் பாத்து வச்சிக்கிட்டு ராத்திரி அமுக்க வேண்டியதுதான்”

“நான் அவரைவிட மோசமானவன். மனிதர்களைப் பிடித்து தின்ன வேண்டியதுதான்” என்று சிரித்தேன்.

“செஞ்சாலும் செய்வீங்க... உங்களுக்குத்தான் பாவமும் கிடையாது, புண்ணியமும் கிடையாதே’’ என்றவர், ‘‘நீங்க யாரையும் குருவா நினைக்க மாட்டேங்கிறீங்க, அதுவாவது பரவாயில்லை. ஏன் யாரையும் சிஷ்யனாவும் ஏத்துக்க மாட்டேங்கிறீங்க. எனக்கு எதுவும் புரியவே இல்லை” என்றார்.

“குரு, சீடர் என்ற உறவு பொய்யானது. ஆன்மிக குருக்கள் எல்லோரும் போலிச் சரக்குகளை விற்றுக் கொண்டிருக்கிறார்கள்’’ என்றதும் எதுவும் பேசத் தோன்றாமல் சிலை போல் நின்றார் சங்கரன்.





# பணத்துக்கும் இதயம் உண்டு



எப்படியாவது தங்கள் மீது புகழ் வெளிச்சம் விழுந்துவிடாதா என்ற ஆசையில் தான் பெரும்பாலான மனிதர்கள் முண்டியடித்துக்கொண்டு வாழ்கிறார்கள். புகழுக்காக எதுவும் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், இந்தக் கூட்டத்தில் வித்தியாசமானவர் ரத்தன் டாட்டா. எந்த வகையிலும் தன் மீது புகழ் வெளிச்சம் விழுந்துவிடக் கூடாது என்பதில் அதிக கவனம் எடுத்துக்கொண்டவர்.

பத்மபூஷன், பத்மவிபூஷன், நற்பணிகளுக்கான கார்னகி பதக்கம், சிங்கப்பூர் அரசு வழங்கிய கவுரவக் குடிமகன் அந்தஸ்து, பிரிட்டிஷ் அரசின் ஹானரரி நைட் கமாண்டர் ஆஃப் பிரிட்டிஷ் எம்பயர் ஆகிய கவுரவங்களைப் பெற்றுள்ளார். டைம் இதழ் வெளியிட்ட உலகின் செல்வாக்கு படைத்த 100 பேர் பட்டியல் மற்றும் உலகின் சக்திவாய்ந்த நபர்கள் பட்டியலில் இடம் பெற்றவர்.

பணம் படைத்த எளிய மனிதர் என்று ஒரு பட்டியல் எடுத்தால் அதில் முதல் நபராக ரத்தன் டாட்டா இருப்பார் என்பது சர்வ நிச்சயம். தனி மனித சுதந்திரம், உணர்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர். தான் மட்டுமின்றி தன் நிறுவன ஊழியர்கள் நலனில் நேரடியாக அக்கறை காட்டியவர். வெற்றி கரமான நிர்வாகி என்றாலும் தனக்கு ஒரு வாரிசு வேண்டும் என்பதற்காக கட்டாயக் கல்யாணம் செய்துகொள்ளாதவர்.

விவாகரத்து செய்துகொள்வது பணக்காரக் குடும்பங்களில் சகஜம் என்றாலும், அதனால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர் ரத்தன் டாட்டா. காதல் கை கூடாத நிலையில், அவர் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்துகொள்ளாமல் தனிமையை நாடியதற்கு பெற்றோரின் விவாகரத்து ஒரு முக்கிய காரணம்.

கோடி கோடியாகப் பணம் இருந்தாலும், அதனை அவர் தன்னுடைய வியாபாரமாக மட்டுமே பார்த்தாரே தவிர, தன்னுடைய அந்தஸ்தாகக் கருதவில்லை. ரத்தன் டாட்டாவின் சொத்து மதிப்பு கிட்டத்தட்ட 3,800 கோடி ரூபாய் என்றாலும் இந்திய பணக்காரர்கள் வரிசையில் 400க்குப் பின்னே இருந்தார். காரணம் என்னவென்றால், இவரது வருமானத்தில் 66% தொண்டு நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படுகிறது.

மும்பையின் கும்ப்லா ஹில்ஸில் உள்ள முகேஷ் அம்பானியின் 27 மாடி ஆடம்பர மாளிகையான ஆன்டிலாவின் பளபளப்புக்கு நேர்மாறாக, அதே மும்பையின் கொலாபாவில் கடற்கரைக்கு அருகே இருக்கிறது ரத்தன் டாட்டாவின் நேர்த்தியான மூன்று மாடி பங்களா. உதவியாளர்கள் வைத்துக்கொள்ளாத கோடீஸ்வரர்.

எளிய மனிதர் என்றாலும் சாகசக்காரர். அதனாலே விமானம் ஓட்டுவதற்கு உரிமம் வைத்திருந்தார். எஃப்16 ரக விமானம் ஓட்டிய முதல் இந்தியர் ரத்தன் டாட்டா. இந்தியா முழுக்க இவருக்கு ஹோட்டல்கள் இருக்கிறது என்றாலும் ஆடம்பர ஹோட்டல்களை விரும்புவதில்லை. அவரது ஹோட்டலில் சாப்பிட்டாலும் சரியாக எண்ணிப் பார்த்து பில் செட்டில் செய்துவிடுவார்.

டாட்டாவின் பொருளை பயன்படுத்தாமல் எந்த ஒரு மனிதரும் இந்தியாவில் இருக்கவே முடியாது. உப்பு தொடங்கி, இணையம் வரை எல்லா தொழிலும் அத்துப்படி என்றாலும் கார்களின் காதலன். அதனால், இந்தியாவில் சொந்தமாகக் காரைத் தயாரிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். இதுசாத்தியமில்லை என்றே அத்தனை நண்பர்களும் தொழில்நுட்ப வல்லுனர்களும் சொன்னார்கள். ஆனால், விடாபிடியாக இன்டிகோ காரை உருவாக்கிக் காட்டினார்.

நடுத்தர மக்களும் கார் வைத்திருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதனால் 1 லட்சம் ரூபாய்க்கு நானோ கார் உருவாக்கிக் காட்டினார். அதன் அடக்கவிலை அதிகம் வந்தது என்றாலும் 1 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்தார். ஆனாலும் மக்கள் இந்த காரை தோல்வி அடையச் செய்தார்கள். நானோ கார் வைத்திருப்பது அந்தஸ்தைக் குறிக்கவில்லை என்பதாலே இதனை வாங்குவதற்கு விரும்பாமல் ஆடம்பரக் கார் வாங்கினார்கள்.

இந்தியாவில் அம்பானி, அதானி போன்றோர் எத்தனையோ அரசு துறைகளில் நுழைந்து துவம்சம் செய்த நேரத்திலும் வேடிக்கை பார்த்தாரே தவிர, போட்டி போடவில்லை. அமைதியாகக் காத்திருந்தார். அந்த பொறுமையே அவருக்கு விரும்பிய ஏர் இந்தியாவை பெற்றுத் தந்தது. அவர் ஓய்வுக்குப் பிறகு ஒளிவட்டம் விழும் அளவுக்கு எங்கேயும் போய் உரை நிகழ்த்தவில்லை. தான் சாதனை செய்ததாக பெருமைபட்டுக் கொள்ளவில்லை. அதேநேரம், குறைந்த விலையில் புற்றுநோய் சிகிச்சை, கிராமப்புற மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கு டாட்டா அறக்கட்டளையைப் பயன்படுத்தத் தொடங்கினார்.


1991இல் ஜேஆர்டி டாட்டாவிடம் இருந்து அவர் கரங்களுக்கு நிறுவனம் வந்த பிறகு ஒட்டுமொத்த குழுமத்தின் தோற்றத்தையும் கட்டுமானத்தையுமே மறுசீரமைக்கத் தொடங்கினார் ரத்தன் டாட்டா. இந்தியாவில் மட்டுமல்ல, 100 நாடுகளில் டாட்டா தடம் பதித்திருக்கிறது. சென்ற இடமெல்லாம் சந்தையை கைப்பற்றி இருக்கிறது.

டாட்டாவின் வெற்றி ஒவ்வொரு இந்தியருக்கும் மகிழ்வு தரும் வெற்றி. ஏனென்றால் இந்தியா முழுக்க கோடிகளை கொட்டி ஏழை

www.gyaanaguru.com







## ரத்தன் டாடா சக்சஸ் மந்திரங்கள்...

- புதுமை என்பது போட்டியிலிருந்து வேறுபட்டு, முன்னேற ஒரே வழி.
- வேகமாக நடக்க விரும்பினால் தனியாக நடங்கள். ஆனால் நீண்ட தூரம் நடக்க விரும்பினால், பிறருடன் சேர்ந்து நடக்க வேண்டும்.
- நம் இலக்கு மிகவும் எளிமையானது: நாம் செய்யும் எல்லாவற்றிலும் சிறந்தவர்களாக இருப்பது
- வியாபாரத்தில், நீங்கள் ஒரு தயாரிப்பை உருவாக்கவில்லை. நீங்கள் ஒரு வாடிக்கையாளரை உருவாக்குகிறீர்கள்
- முக்கியமான விஷயம் என்னவென்றால், எவ்வளவு சிறிய முன்னேற்றமாக இருந்தாலும், முன்னேற்றம் முக்கியமானது.
- சிறந்த வேலை செய்ய ஒரே வழி நீங்கள் செய்யும் வேலையை நேசிப்பதுதான்.
- சரியான முடிவு எடுப்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை... நான் முடிவை எடுத்த பின்பு அதை சரியானதாக்குவேன்
- நிறுவனத்தின் நலனை கடந்து, சமூகத்தின் பயன் சார்ந்து வணிகம் இருக்க வேண்டும்.
- வெற்றி பெறுவதற்கு ஒரே வழி தோல்வியை கண்டு அஞ்சாமல் இருப்பது தான்.

மக்களின் கல்விக்கும், அவர்கள் மேம்பாட்டிற்கும் தொடர்ந்து உதவிக்கொண்டே இருந்தார். கோவிட் உலகை தாக்கிய போது அதற்காக 500 கோடிகளை கொடையாக அளித்தார். மும்பை தாஜ் ஹோட்டல் தாக்கப்பட்டபோது அதில் உயிரிழந்தோருக்கு ஒரு அறக்கட்டளையை உருவாக்கி அதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு உதவிகள் கிடைக்கச்செய்தார்.

ரத்தன் டாட்டாவின் பெற்றோர் விவாகரத்து பெற்றபோது அவருக்கு 10 வயதுதான். ரத்தனுக்கு 18 வயதாக இருந்தபோது, அவரது தந்தை சிமோன் டனோயர் என்ற சுவிட்சர்லாந்து பெண்ணை மணந்தார். மறுபுறம், அவரது தாயார் விவாகரத்துக்குப் பிறகு சர் ஜாம்செட்ஜி ஜீஜீபாய் என்பவரை மணந்தார். ரத்தனை அவரது பாட்டி லேடி நவாஜ்பாய் டாடாதான் வளர்த்தார்.

ரத்தன் அமெரிக்காவில் ஏழு ஆண்டுகள் தங்கியிருந்தார். அங்கு கார்னெல் பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலை மற்றும் பொறியியலில் பட்டம் பெற்றார். அவருக்கு லாஸ் ஏஞ்சலஸில் ஒரு நல்ல வேலை, ஆடம்பரமான வீடு ஒன்று இருந்தது. தனது பாட்டியின் வற்புறுத்தலின் பேரில் இந்தியா திரும்ப வேண்டியிருந்தது. தன்னுடைய காதலியும் உடன் வருவார் என்று எதிர்பார்த்தார். அது நடக்கவில்லை. இந்தியா சீனா போரை காரணம் காட்டி வர மறுத்தார். அதற்குப் பிறகு ரத்தன் டாட்டா தனது வாழ்நாள் முழுவதும் திருமணம் செய்து கொள்ளவில்லை.

1962ம் ஆண்டு ரத்தன் டாட்டா ஜாம்ஷெட்பூரில் உள்ள டாடா ஸ்டீல் நிறுவனத்தில் ஒரு கடைநிலை தொழிலாளியாகப் பயிற்சி எடுத்துக்கொண்டார். அதன் பிறகு திட்ட மேலாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் நிர்வாக இயக்குநர் எஸ்.கே.நானாவதியின் சிறப்பு உதவியாளர் ஆனார். இதற்குப் பிறகு, ரத்தன் டாடா ஆஸ்திரேலியாவில் ஓர் ஆண்டு பணியாற்றினார். நஷ்டத்தில் இயங்கும் சென்ட்ரல் இந்தியா மில் மற்றும் நெல்கோ நிறுவனங்களை மேம்படுத்தும் பொறுப்பை ஜே.ஆர்.டி., அவருக்கு வழங்கினார். ரத்தனின் தலைமையின்கீழ், மூன்று ஆண்டுகளுக்குள், நெல்கோ நிறுவனம் மாற்றமடைந்து, லாபம் ஈட்டத் தொடங்கியது.

ஜே.ஆர்.டி. 75 வயதை எட்டியபோது, அவரது வாரிசு யார் என்பது குறித்து நிறைய ஊகங்கள் இருந்தன. நானி பல்கிவாலா, ருஸ்ஸி மோதி, ஷாருக் சப்வாலா, எச்.என். சேத்னா ஆகியோரில் ஒருவரைத்தான் ஜே.ஆர்.டி தனது வாரிசாகக் கருதினார். பல்கிவாலா மற்றும் ருஸ்ஸி மோதி, ஆகிய இருவர்தான் அந்தப் பதவிக்கான இரண்டு முக்கியப் போட்டியாளர் களாக இருப்பார்கள் என்று ரத்தன் டாட்டாவும் நம்பினார். ஆனால், பதவி ரத்தன் டாட்டாவுக்கு வந்தது. பல புதிய திட்டங்களைப் புகுத்தி நிறுவனத்தின் வருமானத்தை 10 மடங்கு உயர்த்தினார். கோரஸ், ஜாகுவார், லேண்ட் ரோவர் ஆகிய வெளிநாட்டு நிறுவனங்களை டாடா குழுமம் வாங்கியது.

பங்குச் சந்தையில் மிக அதிக சந்தை முதலீடு கொண்டதாக டாடா குழுமம் திகழ்கிறது. இவரது வழிகாட்டுதலில் டாடா கன்சல்டன்சி சர்வீஸ் பொது நிறுவனமானது. நியூயார்க் பங்குச் சந்தையிலும் பட்டியலிடப் பட்டது. 2012 வரை டாடா குழுமத் தலைவராக இருந்தவர், பின்னர் டாட்டா குழும அறக்கட்டளைகளின் தலைவராக இருந்து வழிநடத்தியவர்.

'ரிஸ்க் எடுக்காமல் இருப்பதுதான் பெரிய ரிஸ்க்' என தனது சக்சஸ் மந்திரம் என அவரே சொல்லியிருக்கிறார்.

www.gyaanaguru.com

# ஞானகுரு பதில்கள்

? கடினமாக முயற்சி செய்தால் வெற்றி கிடைத்துவிடும் என்கிறார்கள். ஆனால், நான் பல முறை முயற்சி செய்தும் வெற்றி கிடைக்கவில்லையே..?

**- என்.மோகன்ராஜ், சமயபுரம்.**

**ஞானகுரு :**

வெற்றி கிடைக்கும் வரையிலும் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டே இருக்க வேண்டும். 101 அடியில் தண்ணீர் இருப்பது தெரியாமல் 100 அடி வரை கிணறு தோண்டிவிட்டு முயற்சியைக் கைவிட்டவர்கள் ஏராளம். எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும் வரையிலும் கொஞ்சமும் நம்பிக்கை இழந்துவிடாமல் போராடுவதையே விடாமுயற்சி என்பார்கள். இதற்கு உதாரணம் காட்டவேண்டும் என்றால் நடிகர் விக்ரமை சொல்லலாம். கதாநாயகனாக மாறுவதற்கு வாய்ப்பே இல்லை என்று எத்தனையோ பேர் சொன்ன பிறகும் தொடர்ந்து சினிமாவில் போராடிக்கொண்டே இருந்தார். 1990ம் ஆண்டு என் காதல் கண்மணி என்ற படத்தில் தொடங்கிய அவரது சினிமா கனவு 1999ம் ஆண்டு சேது படம் வரும் வரையிலும் அதே கனவுடன் போராடிக்கொண்டு இருந்தார். சேது படம் கிடைக்கவில்லை என்றாலும் அவர் சினிமா துறையை விட்டுப் போயிருக்க மாட்டார். அப்படியொரு வெறியுடன் போராடுங்கள். வெற்றி நிச்சயம்.



? சாமியாடும் நபர்கள் யாரும் நடிப்பதாகத் தெரியவில்லை. அப்படியென்றால், அது தெய்வச் செயல் தானே..?

**- ஜெ.விசாலாட்சி, மதுரை.**

**ஞானகுரு :**

என்ன காரணத்துக்காக கடவுள் வேறு ஒரு மனிதர் உடலுக்குள் வர வேண்டும்..? அப்படி வருவதன் மூலம் என்ன சொல்ல வருகிறார்..? சாமியாடும் நபர்கள் துல்லியமான எதிர்காலம், கடந்த கால ரகசியம் ஏதாவது சொல்கிறார்களா..? சாமியாடும் நேரத்தில் எந்தப் பெண்ணுக்காவது சேலை விலகியிருக்கிறதா..? சாமியாடுபவர்கள் ஏதாவது அதிசயம் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்களா..? இதையெல்லாம் விடுங்கள். யாருமே இல்லாத நேரத்தில் அதாவது அவர்கள் தனியாக இருக்கும் நேரத்தில் அருள் வந்து சாமியாடுகிறார்களா..? பணக்காரர்கள் யாராவது சாமி வந்து ஆடியிருக்கிறார் களா..? கோயில் பூசாரியாக இருக்கும் பிராமணர்கள் சாமியாடி பார்த்திருக்கிறீர்களா..? ஏன் ஏழை, எளிய மக்களிடம் மட்டும் சாமி வருகிறது..? அவர்கள் விரும்புகிறார்கள், அதனால் சாமியாடுகிறார்கள். அவ்வளவு தான்.



? தமிழ்த்தாய் வாழ்த்து விவகாரம் பற்றி எரிகிறதே... கவர்னர் இப்படி நடக்கலாமா..?

**- ஏ.பாலசுப்பிரமணி, திண்டுக்கல்.**



**ஞானகுரு ;**


கவர்னர் ஆர்.என்.ரவி அரை வேக்காடு என்றால் முதல்வர் ஸ்டாலின் கால் வேக்காடு. இவர்களை விட உருப்படாத அரசியல் சீமானுடையது. தேசிய கீதம், தமிழ்த்தாய் வாழ்த்து போன்றவை எல்லாம் சாதாரண அரசியல் சம்பிரதாயம் மட்டுமே. இதற்காக பொங்குவதும் போராடுவதும் மக்களுக்கு எந்த வகையிலும் நன்மை பயக்காது. மக்களை இனம், மதம், மொழி கடந்தவர்களாக மாற்று வதற்கே அரசும் அரசியல்வாதிகளும் போராட வேண்டும். அப்படி எந்த முயற்சியும் எடுக்காமல், தங்கள் இருப்பைக் காட்டுவதற்காக இவர்கள் சுயநலத்துடன் போராடுகிறார்கள். இந்த கயவர்களிடமிருந்து மக்கள் விலகி நிற்க வேண்டும். நாடுகளின் எல்லைக் கோடுகளும் அழிய வேண்டும். ஒரே இனம், ஒரே மொழி, ஒரே நாடு எனும் சூழல் உருவாக வேண்டும். அதுவே, மனித குலத்துக்கு நல்லது.

? மாதவிலக்கு நாளில் துளசி செடிக்கு தண்ணீர் ஊற்றினால், அது பட்டுவிடும் என்று சொல்லப்படுவது உண்மையா..?

**- எஸ்.ராதா, குமாரபாளையம்.**

**ஞானகுரு :**

சந்திர கிரகணத்தன்று பாம்பு சூரியனை விழுங்குகிறது என்று மக்கள் நம்பினார்கள். தப்பு செஞ்சா கடவுள் தண்டிப்பார் என்று மக்கள் நம்புகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையே துளசி செடி. வியர்வை, சிறுநீர், மலம், தீட்டு ரத்தம் போன்றவை கழிவுகளே தவிர அசுத்தம் இல்லை. அந்த மூன்று நாட்கள் தவிர மற்ற நாட்களிலும் உடலுக்குள் அந்த ரத்தம் தங்கியிருக்கிறது. எல்லா நேரங்களிலும் மனித உடலுக்குள் சிறுநீர் இருக்கிறது, மலம் இருக்கிறது. இந்த உடம்புடன் கோயிலுக்குப் போகலாம் என்றால் துளசி செடிக்கும் தண்ணீர் ஊற்றலாம். யார் என்ன சொன்னாலும் கேள்வி கேளுங்கள், உண்மை தெரிந்துவிடும்.





? அம்மா எனக்காக நிறைய செய்திருக்கிறார், அப்பா எதுவுமே செய்யவில்லை. அவரையும் நான் பாதுகாக்க வேண்டுமா..?

**- சி.லாரன்ஸ், சென்னை.**

**ஞானகுரு :**

அப்பா இல்லாமல் வளரும் பிள்ளைகளிடம் கொஞ்சநேரம் பேசிப் பாருங்கள். அவர்களுடைய குறையை யாராலும் நிவர்த்தி செய்ய முடியாது என்பது புரியும். உங்களுக்கு அவர் உதவி செய்தாரோ இல்லையோ அப்பாவாக இருந்திருக்கிறார். கோயிலில் இருக்கும் சாமியும் உங்களுக்கு எதுவுமே செய்ததில்லை, ஆனாலும் நம்புகிறீர்களே.... அப்படி ஒரு அப்பாவாக இருக்கிறார் என்று மகிழ்ச்சி அடையுங்கள். பெற்றவர்களை காப்பாற்ற வேண்டியது கட்டாயமும் இல்லை, கடமையும் இல்லை. உங்கள் விருப்பம் மட்டுமே.

? என்னிடம் நிறைய பணம் இல்லை. ஆனால், பிறருக்கு உதவி செய்ய நினைக்கிறேன் என்ன செய்யலாம்..?

**- எஸ்.தியாகராஜன், செங்கல்பட்டு.**

**ஞானகுரு :**

தாங்கள் பேசுவதை உண்மையான அக்கறையுடன் கேட்பதற்கு ஆட்கள் இல்லாமலே நிறைய பேர் மனநலம் பாதிக்கப்படுகிறார்கள். இந்த உதவிக்கு பணம் தேவையில்லை. மனமும் நேரமும் மட்டுமே முக்கியம். இதைவிட இன்னொரு உதவி உங்களால் மிக எளிதாக செய்ய முடியும். யாரைப் பார்த்தாலும் மகிழ்ச்சியுடன் புன்னகை செய்யுங்கள். இது பலருக்கு உற்சாக டானிக்காக அமைந்துவிடும்.





www.gyaanaguru.com



**? தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், இறுதியில் தர்மமே வெல்லும் என்கிறார்களே, காரணம் என்ன..?**

**- கே.இந்துமதி, அருப்புக்கோட்டை**

**ஞானகுரு :**

மனிதருக்கு திடீர் சிக்கல், எதிர்பாராத தோல்வி, மோசமான இழப்பு ஏற்படும் நேரத்தில் கடவுள் மீது சந்தேகம் வந்துவிடும். அதாவது, நான் கடவுளுக்கு எவ்வளவோ செய்திருக்கிறேன், எத்தனையோ மனிதர்களுக்கு நன்மை செய்திருக்கிறேன். ஆனாலும் எனக்கு ஏன் இப்படி சோதனை வரவேண்டும், கடவுள் உண்மையில் இருக்கிறாரா என்று சந்தேகப்படுவார்கள் இப்படி சந்தேகப்படுபவர்கள் மேலும் மேலும் சிந்தனை செய்யத் தொடங்கினால், கடவுளின் இருப்பும் மதம் மீதான நம்பிக்கையும் உடைந்து போய்விடும். பயத்தினால் மனிதன் உருவாக்கிய ஒரு பிம்பமே கடவுள் என்ற உண்மை அவனுக்குப் புரிந்துவிடும். அப்படியொரு நிலை ஏற்படுவது ஆன்மிகத்தின் பெயரைச் சொல்லி பணம் சம்பாதிப்பவர்களுக்கு ஆபத்து. அதனாலே சூது கவ்வும் தர்மம் வெல்லும் என்று பொய் சொல்லி கவலையில் இருப்பவருக்கு போலி ஆறுதல் திணிப்பார்கள். 'தர்மம் தலை காக்கும்', 'தெய்வம் நின்று கொல்லும்', 'நல்லவர்களை கடவுள் சோதிப்பார், ஆனால் கைவிட மாட்டார்' போன்றவை எல்லாமே போலி நம்பிக்கைகள். மனிதரின் ஒவ்வொரு செயலுக்கும் அவரே பொறுப்பு, கடவுளுக்கு மனிதரிடம் எந்த வேலையும் இல்லை.

**? ஆசை மட்டும் தான் துன்பத்திற்குக் காரணமா..?**

**- எஸ்.லட்சுமணன், காவிரிப்பூம்பட்டினம்.**

**ஞானகுரு :**

ஆசை போலவே அறியாமையும் துன்பத்திற்குக் காரணம். பொறாமை, கோபம், அச்சம், அகங்காரம், ஏமாற்றம், சோகம் போன்றவை ஏன் உண்டாகின்றன என்ற அறியாமையே பெரும் துன்பம் தருகிறது. இவற்றை எல்லாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனையே நிறைய பேருக்கு இருப்பதில்லை. நம்பிக்கையூட்டும் நூல்கள், நல்ல பேச்சுக்கள், சிறந்த சினிமாக்கள் என்று கற்றுக்கொள்வதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. அறியாமை இருள் அகலும்போது வெளிச்சம் வந்துவிடும். துன்பத்திலிருந்து விலகும் வழியும் தெரிந்துவிடும்.



**? தவறு செய்தவர்களை திட்டுவதற்கே எனக்கு பயமாக இருக்கிறது. ஆனால், நிறைய பேர் எப்படி கொலை செய்கிறார்கள், கொள்ளை அடிக்கிறார்கள்..?**

**- சி.ராஜவேலு, மன்னார்குடி.**

**ஞானகுரு :**

பயம் இருப்பவர்களால் ஒருபோதும் தவறு செய்துவிட முடியாது என்பதால், இந்த பயம் நல்லது. கொலை செய்வதும், கொள்ளை அடிப்பதும் தீரச்செயல் அல்ல, குற்றம். கொலை, கொள்ளை செய்துவிட்டு யாரும் அங்கேயே நிற்பதில்லை. தப்பித்து ஓடுகிறார்கள் என்பதில் இருந்தே அவர்கள் பயத்தை அறிய முடியும்.

எனவே, பயம் இல்லாத மனிதர் உலகில் யாருமே இல்லை. தவறு நடப்பதை தட்டிக் கேட்கும் வீரன் ஒருவனுக்கு மேடையில் ஏறி பேசுவதற்குப் பயம் இருக்கலாம். 120 கி.மீ. வேகத்தில் வண்டி ஓட்டுபவருக்கு மனைவியை எதிர்த்துப் பேசுவதற்கு பயம் இருக்கலாம். இப்படி ஆளாளுக்கு பயம் இருக்கும் இடம் மாறுபடும். அவ்வளவு தான். அதேநேரம், பயம் ஏன் வருகிறது, இதில் இருந்து எப்படி வெளிவருவது என்று ஒருவர் யோசிக்கத் தொடங்கினால் நிச்சயம் பயத்தில் இருந்து வெளிவர முடியும். முயற்சி செய்து பாருங்கள்.





**? விஜய் கட்சியின் முதல்வர் வேட்பாளர் சகாயம் ஐ.ஏ.எஸ்ன்னு சொல்றாங்களே... விஜய் ஜெயிக்க வாய்ப்பு இருக்கிறதா..?**

**- சி.பரந்தாமன், சென்னை**

**ஞானகுரு :**

விஜய்க்கு சினிமா நன்றாகத் தெரியும். அந்த அளவுக்கு அரசியலும் அரசாங்கத்தின் செயல்பாடுகளும் தெரியாது, அதேநேரம், எல்லாவற்றையும் தெரிந்துகொண்ட பின்னரே ஒருவர், அரசியலுக்குள் நுழைய வேண்டும் என்பதும் அவசியம் இல்லை. முதல்வர் நாற்காலியை இன்னொரு நபருக்குக் கொடுக்கும் அளவுக்கு தைரியமும், அதற்கு மிகச்சரியான நபரை தேர்வு செய்யும் மனப்பான்மையும் அரசியலுக்குப் போதும்.

ரசிகர்கள் விஜய்யை முதல்வராகப் பார்க்க ஆசைப்படுகிறார்கள். ஆனால், அவர் வேறு ஒருவரை கை காட்டினால் நிச்சயம் ஏற்பார்கள். சகாயம் நேர்மையான அதிகாரியாக அறியப்பட்டவர். ஆனால், அரசியல் கட்சி தொடங்க நினைத்து தோற்றுப் போனவர். எனவே அவர் ஒருவர் மட்டும் போதாது.

சகாயத்தைப் போன்று திறமையான, நேர்மையான அதிகாரிகள், அரசியல்வாதிகள், சேவையாளர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களில் நிறைய பேரை விஜய் தன் பக்கத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால், அவர்களை முன்னிறுத்துவதால் தன்னுடைய செல்வாக்கு குறைந்துவிடும் என்று அச்சம் இருந்தால் விஜய் தலைவராக முடியாது.

அனுபவம் வாய்ந்த நபர்கள் மட்டும் போதாது. மிகச் சரியான கொள்கைகளை உருவாக்கி மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும். செல்வாக்குள்ள விஜய்யும் சேவை மனப்பான்மையுள்ள அனுபவசாலிகளும் ஒன்று சேர்ந்தால் நிச்சயம் ஒரு பெரிய மாற்றம் உருவாகும்.

மக்கள் எப்போதும் மாற்றத்துக்குத் தயாராகவே இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவை ஒரு உண்மையான தலைவர் மட்டுமே.

பதவி ஆசை இல்லாத உண்மையான தலைவர் என்பதை விஜய் மக்களுக்கு நிரூபித்துக் காட்டினால் ஆட்சி கிட்டும்.



# ஞானகுரு

இயக்கத்தில்

# இணையுங்கள்

## மகிழ்ச்சியாக மாறுங்கள்

## மகிழ்ச்சியைப் பரப்புங்கள்



## ஞானகுரு மகிழ்ச்சியாளர் சேர்க்கை ஆரம்பம்

## ஆயுள் சந்தா 1 லட்சம் ரூபாய்

மகிழ்ச்சியைப் பரப்பும் ஒரு புதிய மதம் ஞானகுரு.

ஆரோக்கிய உடல், நிம்மதியான மனம், போதுமான பணம் ஆகியவற்றுடன் ஆறுதலான உறவுகள் அமைவதே மனிதருக்கு மகிழ்ச்சி தருகிறது. இவற்றை ஒவ்வொரு நபரும் அடைவதற்கு வழிகாட்டும் வகையில் ஞானகுரு மகிழ்ச்சி, ஞானகுரு யாக்கை, ஞானகுரு தமிழ்லீடர் போன்ற மின்னிதழ்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஞானகுரு பதிப்பகத்திலிருந்து நம்பிக்கையூட்டும் நூல்கள் வெளியாவதுடன், அன்றாடம் புதிய செய்திகளுடன் ஞானகுரு இணையம் - ஞானகுரு (gyaanaguru.com) இயங்கி வருகிறது. இவை எல்லாமே நிறைய வாசகர்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதற்காக கட்டணமின்றி வழங்கப்படுகின்றன. இந்த சேவையைத் தொடர்வதற்கும் மகிழ்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டுசெல்லவும் ஞானகுரு மகிழ்ச்சியாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். ஞானகுரு இயக்கத்தில் சேர்வதற்கு வாழ்நாள் சந்தா என ரூபாய் 1 லட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நிறைய செல்வமும் பெரிய மனமும் உள்ளவர்கள் மட்டுமே இந்த இயக்கத்திற்கு செலவு செய்தால் போதும் என்பதற்காகவே இந்த தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மகிழ்ச்சியாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்போது நம்முடைய வாசகர்கள், ஞானகுரு ஆதரவாளர்கள் மற்றும் சமூகம் மகிழ்ச்சியுடன் வாழத் தொடங்கும்.

ஞானகுரு மகிழ்ச்சியாளராக இணைபவருக்கு மதிப்பளிக்கும் வகையில் ஞானகுரு மின்னிதழ்களின் அச்சு இதழ் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்படும். ஞானகுரு பதிப்பக புத்தகங்களும் வெளியாகும் தருணங்களில் அனுப்பப்படும். அதோடு மனவளக் கலை பயிற்சியளித்து தேர்ச்சி சான்றிதழ் வழங்கப்படும். ஞானகுரு குடும்பத்தில் இணைவதற்கு அன்போடு அழைக்கிறோம்.

தொகை அனுப்ப வேண்டிய முகவரி: Gyanaguru Publication,
Union Bank of India, Current Account No. 548401010050639,
IFSC CODE : UBIN0554847, PAN : AKLPJ7628N

மேலும் தொடர்புக்கு : எஸ்.கே.முருகன் - 9840903586, 7299753999



# கவியரசு கண்ணதாசனின் 6 கட்டளைகள்

மக்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய எல்லாமே இலக்கியமே. சினிமா பாடல்களையும் இலக்கிய தரத்துக்கு எடுத்துச்சென்று சொல்வதை அழுத்தமாகவும் தெளிவாகவும் எழுதுபவர் கவிஞர் கண்ணதாசன். சோகத்தில் இருப்பவர்கள் ஆறுதல் அடைவதற்கு அவர் திரைப்பாடலில் கூறியிருக்கும் ஆறு கட்டளைகளைக் கடைப்பிடித்தாலே போதும்.



1. ஒன்றே சொல்வார்
ஒன்றே செய்வார்
உள்ளத்தில்
உள்ளது அமைதி!

2. இன்பத்தில் துன்பம்
துன்பத்தில் இன்பம்
இறைவன் வகுத்த
நியதி!

சொல்லுக்குச் செய்கை பொன்னாகும், வரும் இன்பத்தில் துன்பம் பட்டாகும் – இந்த இரண்டு கட்டளை அறிந்த மனதில் எல்லா நன்மையும் உண்டாகும்!

3. உண்மையைச் சொல்லி
நன்மையைச் செய்தால் உலகம்
உன்னிடம்
மயங்கும்!

4. நிலை உயரும்போது பணிவு
கொண்டால் உயிர்கள் உன்னை
வணங்கும்!

உண்மை என்பது அன்பாகும் – வெறும் பணிவு என்பது பண்பாகும் – இந்த

நான்கு கட்டளைகள் அறிந்த மனதில் எல்லா நன்மையும் உண்டாகும்!

5. ஆசை, கோபம்,
களவு கொள்பவன்
பேசத் தெரிந்த
மிருகம்!

6. அன்பு, நன்றி,
கருணை
கொண்டவன் மனித
வடிவில் தெய்வம்!

இதில் – மிருகம் என்பது கள்ளமனம். உயர் – தெய்வம் என்பது பிள்ளைமனம்
இந்த – ஆறு கட்டளை அறிந்தமனது ஆண்டவன் வாழும் வெள்ளைமனம்.
இந்த ஆறு கட்டளைகளை அறிந்துகொண்டால் சோகம் நெருங்காது என்பதே கண்ணதாசன் காட்டும் வழி.


www.gyaanaguru.com

# பணத்துக்கு நேரடியா ஆசைப்படாதீங்க, கிடைக்காது



“நிறைய பணம் சேர்க்க ஆசைப்படுறேன். ஆனா, அது நடக்கவே மாட்டேங்குது. நான் கஷ்டப்பட்டு உழைச்சும் எந்த பிரயோஜனமும் இல்லை” என்று வருத்தமாகப் பேசினார் மகேந்திரன்.

ஞானகுரு நிதானமான குரலில், “எதற்காக நிறைய பணம்…?” என்று கேட்டார்.


“இது என்ன கேள்வி. நிறைய பணம் இருந்தால் எதிர்காலத்துக்கு நம்பிக்கை கொடுக்கும். அதான்…”

‘’பறவைகள் உணவைத் தேடி பறக்கின்றன. விலங்குகள் இரையைத் தேடி நகர்கின்றன. அதனாலே கண்டுபிடிக்கின்றன. அது போல் எதற்காக பணம் தேவை என்று முதலில் கண்டுபிடியுங்கள். அதன்பிறகே பணத்தை உங்களால் தேடவும், அடையவும் முடியும்….”

“புரியவில்லையே…”

“பணம் வேண்டும் என்பது ஒரு லட்சியம் அல்ல. நிலாவை தொட்டுப் பார்க்க வேண்டும். நடிகனாக வேண்டும் என்பது போன்ற ஆசை அது. அந்த ஆசை நிறைவேறாது என்று உங்கள் மனதுக்கும் தெரியும். எனவே அதற்காக உழைக்க மாட்டீர்கள். அதேநேரம், ஒரு குறிக்கோள் வைத்துக்கொண்டால் அது பணத்தைக் கொண்டுவரும். 50 லட்சம் ரூபாய் வேண்டும் என்று நினைத்தால் அது ஆசை. ஆனால், ஒரு வீடு கட்ட வேண்டும் என்று நினைப்பது லட்சியம். ஒரு வீடு கட்டுவதற்கு 50 லட்சம் தேவைப்படும் என்றால் அது லட்சியத்திற்கான தேடுதல் ஆகிவிடும். இப்போது நீங்கள் பணம் தேடுவதில்லை. வீடு கட்டுவதற்கான வழிகளைத் தேடுகிறீர்கள். எப்படியெல்லாம் 50 லட்சம்

www.gyaanaguru.com
www.gyaanaguru.com



ரூபாய் கிடைக்கும் என்று யோசிக்கிறீர்கள். இதுவே, பணத்தைக் கொண்டுவரும்...”

”அது எப்படி..?”

‘‘வீடு கட்டுவதற்கு 50 லட்சம் ரூபாய் வேண்டும் என்றால் அது நாளையே நடக்காது என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, ஐந்து ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகள் என்று ஒரு கணக்குப் போடுவீர்கள். அதனை பெறுவதற்கு ஒரு திட்டம் உருவாக்குவீர்கள். எந்த நோக்கமும் இல்லாத காலத்தில் சம்பாதிக்கும் பணத்தை கணக்கு பார்க்காமல் செலவு செய்வீர்கள். இப்போது ஒரு லட்சியம் இருப்பதால் அப்படி செய்ய மாட்டீர்கள். கையில் இருக்கும் பணத்தை எப்படி மிச்சப்படுத்துவது, சேமிக்கும் பணத்தை எப்படி முதலீடு செய்வது, பகுதி நேரத்தில் எப்படி பணம் ஈட்டுவது என்றெல்லாம் யோசிப்பீர்கள். நீங்கள் சும்மா இருந்தாலும் குறிக்கோள் உங்களை தூங்க விடாது. எனவே, என்னென்ன வழியில் பணம் திரட்ட முடியும் என்ற யோசனையே பணத்தைக் கொண்டுவந்துவிடும்...”

“நிஜமாகச் சொல்கிறீர்களா..?”

“ஆம். அதேநேரம் உங்கள் நோக்கம் நியாயமானதாக இருக்க வேண்டும். மாதச் சம்பளத்தில் இருந்துகொண்டு ஒரு பங்களா கட்டுவதற்கு ஆசைப்பட்டால் அது பேராசை. நிறைவேறவே செய்யாது. அதேநேரம், ஒரு தொழில் தொடங்க வேண்டும், அதன் பிறகு பங்களா கட்ட வேண்டும் என்று திட்டமிட்டால் அது முடியலாம்...”

“நகையை விற்று பங்குச்சந்தையில் முதலீடு செய்தால் பணம் கொட்டும் என்கிறார்களே..?”

“நகை என்பதே ஒரு நல்ல முதலீடு தான். அது கொஞ்சம் கொஞ்சமாக விலை உயர்ந்துகொண்டு தான் இருக்கும். அதை விற்பனை செய்வது சிறு நஷ்டம் வரும். எனவே நகையை விற்று முதலீடு செய்வது வீண். சேமித்த பணத்தை முதலீடு செய்வதே புத்திசாலித் தனம். அதுவும் அவசரத்துக்குப் பணம் தேவைப்படும் என்றால் பங்குச்சந்தை பக்கம் எட்டிப் பார்க்க வேண்டாம். 10 வருடங்களுக்குப் பிறகு வருமானம் வந்தால் போதும் என்ற அளவில் முதலீடு செய்யவும் காத்திருக்கவும் முடியும் என்றால் பங்குச்சந்தைக்குள் நுழையலாம்.

அதேநேரம், யார் யாரோ சொல்கிறார்கள் என்று எந்த முதலீடும் செய்யாதீர்கள். பங்குச் சந்தையில் என்ன நடக்கிறது என்று ஓர் ஆண்டு காலமாவது உன்னிப்பாகக் கவனியுங்கள். அதன் பிறகு முதலீடு செய்யுங்கள். அந்த பொறுமையும் அவதானிக்கும் தன்மையும் இல்லை என்றால் வங்கியில் போட்டுவிட்டு நிம்மதியாக இருங்கள்....”

“நிலம் நல்ல முதலீடுதானே..?”

“நிலம் வாங்கிப் போட்டு பணம் அள்ளியவர்கள் காலம் முடிந்துவிட்டது. இப்போது நிலம் வாங்கிப் போடுவது அத்தனை லாபகரமாக இருக்காது. 20 வருடங்கள் காத்திருக்க முடியும் என்றால் வாங்கிப் போடு...”

“நீங்கள் எதில் முதலீடு செய்வீர்கள்..?”

“நான் என உடம்புக்கு மட்டுமே முதலீடு செய்கிறேன். இதுவே என் லட்சியம்” என்று சிரித்தார் ஞானகுரு.

www.gyaanaguru.com





# கவித்துவம்

ஒரு இலை உதிர்வதால்
மரத்துக்கு ஒன்றுமில்லை.
ஒரு மரம் படுவதால்
பூமிக்கு ஒன்றுமில்லை.
ஒரு பூமி அழிவதால்
பிரபஞ்சத்துக்கு ஒன்றுமில்லை.
ஒரு பிரபஞ்சம் போவதால்
எனக்கு ஒன்றுமில்லை.

– ஆனந்த்

www.gyaanaguru.com



# ஸ்வேதா எனும் கண்ணீர் தேவதை



**எஸ்.கே.முருகன்,**
மனவள ஆலோசகர்.

ஸ்வேதாவை அழைத்துக்கொண்டு அவரது அம்மா, அப்பா இரண்டு பேரும் வந்தனர். பெரும்பாலும் டீன் வயதினருடன் அம்மா அல்லது அப்பா ஒருவர் மட்டுமே வருவார்கள். இரண்டு பேரும் சேர்ந்து வந்திருப்பது, ஸ்வேதா மீது அவர்கள் வைத்திருக்கும் அளவுகடந்த பாசத்தைக் காட்டியது.

ஸ்வேதாவின் தாயார் பேசத் தொடங்கினார். "எங்க ஸ்வேதா ரொம்ப நல்லா படிக்கிறா.. வகுப்பில் முதல் மார்க் இல்லைன்னாலும் மூணு அல்லது நாலாவது ரேங்க் வந்துடுவா. இந்த வருஷம் +2 சேர்ந்ததுல இருந்து அவளோட நடவடிக்கையில் நிறைய மாற்றம் தெரியுது.

காலையில வேகமா எழுந்து படிச்சிக்கிட்டு இருப்பா. அதேபோல் ராத்திரியும் ரொம்ப நேரம் படிப்பா. இப்போ கொஞ்சநாளா அடிக்கடி அழுதுக்கிட்டு இருக்கிறா. கேட்டா... கண்ல தூசு விழுந்திடுச்சு, லேசா வயிறு வலிக்குதுன்னு ஏதாச்சும் காரணம் சொல்றா. ஒரு நாள் பாத்ரூம்ல இருந்தும் அழுகை சத்தம் கேட்டது. கேட்டா, ஒண்ணுமில்லைன்னு சொல்றா.

ஸ்கூல்ல ஏதாச்சும் பிரச்னையான்னு அங்கே போய்க் கேட்டோம். அங்கே எதுவுமே இல்லை, எப்பவும் போல நார்மலா இருக்கிறதா சொல்றாங்க. அதனால ஃபேமிலி டாக்டர்கிட்டே கூட்டிட்டுப் போனோம். அவருதான் கவுன்சிலிங் கூட்டிட்டுப் போகச் சொன்னாங்க...." என்று முடித்தார். அத்தனை விஷயங்களையும் கேட்டுக்கொண்டு ஸ்வேதா அமைதியாக இருந்தார். ஸ்வேதாவைப் பார்த்ததும், "நிஜமாவே காரணம் எதுவுமே இல்லை. திடீர்னு வயிறு வலி இல்லைன்னா ஏதாச்சும் பிரச்னையில அழுகை வருது, அப்புறம் ஃப்ரெஷ்ஷா ஆயிடுறேன். அம்மா தேவையில்லாம பயப்படுறாங்க..." என்றபடி வலிந்து சிரித்தார்.

"இந்த வருஷம் எப்படியாவது அவளை மெடிக்கல்ல சேர்த்துடலாம்னு ரொம்ப நம்பிக்கையா இருக்கோம். இப்படி இருந்தா கண்டிப்பா அவ நல்ல மார்க் வாங்க முடியாது" என்றார் அப்பா.

"படிக்கிறது கஷ்டமா இருக்குதா...?" என்று கேட்டதும்,



"இல்லை எப்பவும் போல நார்மலாத் தான் இருக்குது..." என்றார் ஸ்வேதா.

பெற்றோர் இருவரையும் வெளியே அனுப்பிவிட்டு ஸ்வேதாவிடம் பேசத் தொடங்கினேன். அவருக்குப் பிடித்த நடிகரைக் கேட்டதும் ஒரு மலையாள நடிகரின் பெயரைச் சொன்னார். அது கொஞ்சம் ஆச்சர்யமாக இருந்தது. நிறைய மலையாள படம் பார்ப்பதுண்டா என்று கேட்டதற்கு அப்படியெல்லாம் இல்லை, அவ்வப்போது பார்ப்பேன் என்றார்.

அவளுடைய வகுப்புத் தோழி கவுசல்யா எப்போதுமே முதல் ராங்க் எடுப்பது எப்படியென்று புரியவே இல்லை என்றாள். யார் மீதாவது காதல் வந்திருக்கிறதா என்று கேட்டதற்கு, "காதல்னு சொல்ல முடியாது. ஒரு பையனை ரொம்பப் பிடிக்கும். ஆனா, இப்போ அது பற்றி நினைச்சக்கூட பார்க்கக்கூடாதுங் கிறதுல உறுதியா இருக்கேன். இப்போ படிப்பு தான் முக்கியம்" என்று ரொம்பவே மெச்சூர்டாகப் பேசினார்.

"பள்ளியில் அல்லது உறவுகள் யாரேனும் டார்ச்சர் செய்கிறார்களா, யாரைப் பார்த்தாவது பயமாக இருக்கிறதா..?"

"சேச்சே, யாரும் என்கிட்டே தப்பா நடக்க மாட்டாங்க. வேற யாரையும் என் பக்கத்துல கூட அம்மா விட மாட்டாங்க. நிஜமாவே ஏன் அழுகை வருதுன்னு எனக்குத் தெரியலை, ரெண்டு மூணு தடவை அழுத நேரத்தில் அம்மா பார்த்துட்டாங்க. அதை ஏதோ பெரிய பிரச்னைன்னு இங்க கூட்டிட்டு வந்துட்டாங்க. நான் நார்மலா இருக்கேன். இனிமே அழாம இருக்கேன். நீங்க அம்மாகிட்டேயும், அப்பாகிட்டேயும் அப்படியே சொல்லிடுங்க..." என்றாள்.

"அம்மா, அப்பா சண்டை போடுறாங்களா... வீட்டுல பணப் பிரச்னை ஏதாச்சும் இருக்குதா?"

"இல்லைங்க. எந்த பிரச்னையுமே இல்லை. நிஜமாவே ஏன் அழுகை வருதுன்னு எனக்குத் தெரியலை, ஆனா, அது ஒரு பிரச்னை இல்லை" என்றார் தெளிவாக.

'சரி, நாளை ஒரு நாள் மட்டும் வந்துவிடு. நிறைய மதிப்பெண் எடுப்பதற்கு சில வழிகள் சொல்லித் தருகிறேன். ஏதேனும் வகையில் பிரயோஜனப்படுகிறதா என்று

www.gyaanaguru.com

www.gyaanaguru.com

பார்க்கலாம்..” என்று சொல்லி அனுப்பி வைத்தேன்.

ஸ்வேதா கூறிய பதில்களில் இருந்து அவர் ரொம்பவும் புத்திசாலி என்பது புரிந்தது. கவுன்சிலிங்கில் என்ன கேட்பார்கள், அதற்கு எப்படி பதில் சொல்ல வேண்டும் என்று யோசித்து வந்திருப்பது தெளிவாகத் தெரிந்தது. அதனால், இன்று அவரிடம் பேசுவது எந்த பிரயோஜனமும் இல்லை என்று அனுப்பி வைத்தேன்.

அடுத்த நாள் கையில் ஒரு நோட்டு, பேனாவுடன் வந்து அமர்ந்தார் ஸ்வேதா. “எப்படியாவது ஃபர்ஸ்ட் ரேங்க் எடுப்பதற்கு மட்டும் வழி சொல்லிக்கொடுங்கள்” என்று ஆர்வமாகக் கேட்டாள்.

அவள் படிக்கும் வழிமுறைகளைக் கேட்டு, அதில் இருந்த சிக்கல்களை விளக்கி ஒவ்வொரு மணி நேரத்துக்கும் ஒரு சின்ன கோல் செட் செய்து, அதை மட்டும் முடித்தால் தன்னம்பிக்கை வந்துவிடும் என்று பேசிக்கொண்டே, “ஒரு வேளை உன் அம்மா, அப்பா ஆசைப்பட்ட அளவுக்கு மதிப்பெண் எடுத்து மருத்துவக் கல்லூரியில் சேர முடியவில்லை என்றால் என்ன செய்வாய்?” என்று சாதாரணமாகக் கேட்டேன்.

அதுவரையிலும் கலகலப்பாக பேசிக்கொண்டிருந்த ஸ்வேதா திடீரென சிலையாக மாறிவிட்டார். சட்டென கண்கள் கலங்கியது. அழத் தொடங்கிவிட்டார். நன்றாக அழுது முடிக்கட்டும் என்று காத்திருந்தேன். சில நொடிகள் அழுது முடித்தவர் கலங்கிய கண்களுடன் பேசினார்.


“எங்க அப்பா இப்போ ஒரு பெரிய ஆஸ்பத்திரியில அட்மினிஸ்ட்ரேஷன் செக்ஷன்ல வேலை செய்றாரு. நான் டாக்டராகி அதே ஆஸ்பத்திரியில வேலை பார்க்கணும், எல்லோரும் என்னை மதிக்கணும்னு ஆசைப்படுறார். அவரால் டாக்டராக முடியலைன்னு என் மேல ரொம்பவும் நம்பிக்கை வைச்சிருக்கார்.

நான் தனி ரூம்ல படிக்கிறேன். அம்மாவை தொந்தரவு செய்யக்கூடாதுன்னு நினைக்கிறேன். ஆனா, நான் எப்ப எழுந்து லைட் போட்டு படிச்சசலும் எப்படியோ அம்மாவுக்குத் தெரிஞ்சுடுது. உடனே எனக்கு டீ இல்லைன்னா ஹார்லிக்ஸ்போட்டுக்கொண்டுவர்றாங்க.

இப்படி ரெண்டு பேரும் என் மேல ரொம்பவும் பாசம் காட்டுறாங்க. ஆனா என்னால நாலாவது ரேங்க்ல இருந்து கூடுதலா மார்க் எடுக்கவே முடியலை. நான் டாக்டர் ஆக முடியலைன்னா அவங்க ரெண்டு பேரும் ரொம்பவும் மனசு உடைஞ்சு போயிடுவாங்க. இதை நினைச்சுப் பார்த்தாலே எனக்கு அழுகை வந்திடுது. என்னால கண்டிப்பா நிறைய மார்க் எடுக்க முடியாது. இதை எப்படி சொல்லுவேன்...” என்று மீண்டும் அழுதார்.

நன்றாகப் படிக்கும் பிள்ளைகளுக்கு மன அழுத்தம் வருவதில்லை என்று பலரும் நம்புகிறார்கள். உண்மையில் எல்லோருக்கும் மனதில் பயமும், குழப்பமும் வரும் என்பதற்கு உதாரணமாக எதிரில் அமர்ந்திருந்தார் ஸ்வேதா.

அவள் அழுகைக்கான காரணம் புரிந்துவிட்டதால், இனி அதை சுலபமாகத் தீர்த்துவிட முடியும். பொதுவாக பெற்றோர் தங்களுடைய ஆசைகளை, கனவுகளை பிள்ளையின் மீது அளவுக்கு அதிகமாகத் திணித்துவிடுகிறார்கள். பாசத்தைக் காட்டி எமோஷனல்







பிளாக்மெயில் செய்கிறார்கள்.

இது தவறு என்று தெரியாமலே பெற்றோர் செய்கிறார்கள். பிள்ளைக்கு நல்லது செய்வதாக நினைத்தே இப்படி செய்கிறார்கள். தங்களுக்குக் கிடைக்காத சந்தோஷம், மகிழ்ச்சி, பெருமை எல்லாமே பிள்ளைக்குக் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். ஆனால், அது குருவி தலையில் பனங்காய் வைத்த கதையாக மாறி, அவர்களுக்கு மன அழுத்தம் ஏற்படுவதை உணர்வதில்லை.

ஸ்வேதா அழுது முடித்ததும், “நீ ஏன் அவ்வப்போது அழுகிறாய் என்பதற்கான காரணத்தை உணர்ந்துவிட்டாயா..?”

அமைதியாக இருந்தார். “நீ உன்னுடைய வாழ்க்கையை வாழ வேண்டும். உன் தந்தை, தாயின் ஆசையை நிறைவேற்றுவது உன்னுடைய கடமை இல்லை என்பதை முதலில் புரிந்துகொள். பெற்றோருக்காக ஒரு வாழ்க்கையை நீ தேர்வு செய்தால், நாளை உன் பிள்ளையிடம் உன் ஆசையைத் திணிப்பாய். அந்த பிள்ளையும் நள்ளிரவில் எழுந்து அழும்...”

“எனக்கும் மருத்துவம் படிக்கத் தான் ஆசை...”

விருப்பப்பட்ட துறையில் படித்து ஜெயிப்பவர்கள் ஒரு ரகம் என்றால், எந்த துறை கிடைக்கிறதோ அதில் ஜெயிப்பவர்கள் ஒரு ரகம். உன் பெற்றோர் சின்ன வயதிலிருந்து உனக்கு மருத்துவம் பற்றி கூறி வந்ததால் உன்னுடைய ஆசையும் அதுவாக இருக்கிறது. அவ்வளவுதான். எந்த துறையில் படித்தாலும் உச்சம் தொட முடியும். மருத்துவம் மட்டுமல்ல, மருத்துவம் சார்ந்த எத்தனையோ படிப்புகள் இருக்கின்றன. அதையும் தேர்வு செய்யலாம். நீ அறிவியல் விஞ்ஞானியாக, ஐ.ஏ.எஸ். அதிகாரியாக, கம்ப்யூட்டர் நிபுணராக மாறினாலும் உன் தாயும் தந்தையும் மகிழ்ச்சி அடையவே செய்வார்கள்.

கூகுள் நிறுவனத்தில் தலைமைப் பொறுப்பில் இருக்கும் சுந்தர் பிச்சை என்ன படித்தார் என்று தெரியுமா?”

“கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்திருப்பார்..?”

“இல்லை. சென்னையில் பனிரெண்டாம் வகுப்பு முடித்தபிறகு காரக்பூர் ஐ.ஐ.டி.யில் உலோகப் பொறியியல் எனப்படும் மெட்டெலார்ஜிகல் என்ஜினியரிங் படித்தார். அதன்பிறகு எம்.எஸ். படிப்பில் சயின்ஸ் அண்ட் என்ஜினியரிங் படித்தார். பின்னர் எம்.பி.ஏ. படித்தார். அவர் கூகுள் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்த பிறகு அவர் படித்த துறைக்கு கொஞ்சமும் தொடர்பு இல்லாத கம்ப்யூட்டர் மென்பொருள் துறையில் இறங்கி கூகுள் குரோம், குரோம் ஒ.எஸ்., கூகுள் குரோம் உருவாக்கத்தில் பெரும் பங்கு ஆற்றினார். படித்த படிப்புக்கும் ஒருவரது வெற்றிக்கும் எந்த தொடர்பும் கிடையாது.

நமது முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் இயற்பியல் படித்தார். அதற்குத் தொடர்பு இல்லாமல் விமானவியல் பொறியியல் கற்றார். ஆனால், அவர் புகழ் அடைந்தது அணு ஆயுத ஏவுகணைகளில் தான். ஆகவே, படிப்புக்கும் வெற்றிக்கும் தொடர்பு இல்லை. அதனால் மருத்துவப் படிப்பு கிடைக்கவில்லை என்றால் வாழ்க்கையே போய்விடும் என்று அஞ்சுவதற்கு எதுவுமே இல்லை.

எத்தனை பேர் நிறைய மதிப்பெண் எடுத்தும் மருத்துவம் வேண்டாம் என்று பொறியியல் தேர்வு செய்கிறார்கள் என்பது தெரியுமா? இன்னும் நிறைய பேர் நல்ல மதிப்பெண் இருந்தாலும் படிப்பதற்கு பணம் இல்லாமல் கல்வியை கைவிட்டு வேலைக்குப் போகிறார்கள் தெரியுமா? உனக்கு எல்லாம் சரியாக அமைந்திருக்கிறது. உனக்கு பெற்றோர் உதவுகிறார்கள்.

அவர்களுக்கு நீ ஒரு நல்ல மகளாக உன் கடமையை மட்டும் செய்தால் போதும். அதாவது, நன்றாக படிப்பதும் நன்றாக பரீட்சை எழுதுவதும் மட்டுமே உன்னுடைய வேலை. என்ன மார்க் வரும் என்பது உன்னுடைய கையில் இல்லை. என்ன முடிவு வந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.” என்று ஸ்வேதாவிடம் பேசிவிட்டு அவரது பெற்றோரிடம் பேசினேன்.

“உங்களுக்கே தெரியும். கிட்டத்தட்ட 10 லட்சம் மாணவர்கள் +2 தேர்வு எழுதுகிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் கனவு மருத்துவப் படிப்பாக இருக்கிறது. ஆனால், மருத்துவப் படிப்புக்கான இடம் ஆயிரக்கணக்கில் கூட இல்லை. எனவே கடுமையான போட்டியை உங்கள் மகள் சந்திக்கிறார். அவரை ஊக்குவிப்பதில் எந்த தவறும் இல்லை. அதேநேரம், அது அழுத்தமாக மாறிவிடக் கூடாது.

மருத்துவம் இல்லையென்றால் எது கிடைத்தாலும் படித்து ஜெயிக்க முடியும் எனும் வகையில் அவருக்கு நீங்கள் ஆதரவாக நிற்பதை உறுதி செய்ய வேண்டும். தோற்றாலும் ஜெயித்தாலும் உங்கள் பிள்ளையை நேசிக்கத்தான் செய்வீர்கள் என்பதை உணர வையுங்கள். அதிக மதிப்பெண் கிடைக்கவில்லை என்றால் பெற்றோரின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும் என்ற பயமே அவளை அழ வைத்திருக்கிறது. இனி அவள் அழுவதும் அழாமல் தைரியமாக வாழ்க்கையை எதிர்கொள்வதும் உங்கள் கையில்தான் இருக்கிறது” என்று எடுத்துச் சொல்லி அனுப்பி வைத்தேன்.

அதன் பிறகு ஸ்வேதா அழவே இல்லை என்று அவளது அப்பா நன்றி சொல்லிவிட்டுப் போனார்.

தொடர்புக்கு : 9840903586

# ஞானகுரு மகிழ்ச்சி

## பொக்கிஷ இதழ்கள் படிக்க விரும்புகிறீர்களா..?




## 25 மின்னிதழ்கள்
## 500 ரூபாய் மட்டுமே.

+91 72997 53999 எண்ணுக்கு 500 ரூபாய் அனுப்பிவையுங்கள்.
உங்கள் மெயிலுக்கு இதழ்கள் அனுப்பப்படும்.

www.gyaanaguru.com